# திராவிட நாடு


REGD M 4642


## முடியுமா?

—*—

"அன்றாட வாழ்க்கையில் காணப்படும் தீண்டாமையையும், மூட நம்பிக்கையையும், அறியாமையையும், கஷ்டத்தையும், அகாலமரணத்தையும் வெறும் ஒரு உத்தரவினால் மட்டும் போக்கிவிட முடியுமா?"

டாக்டர் ஜாகீர் ஹுசேன்




மலர் 6] 22-6-47 [இதழ் 4

16-ம் பக்கத் தொடர்ச்சி

டைய முயற்சிகள் வீண்போகவில்லை. நீண்டகால வழக்கின்பின் டிரைபஸ் 1906-ல் தூய்மையானவனென முழு விடுதலையளிக்கப்பட்டு உயர்ந்த இராணுவபதவிகள் கொடுக்கப்பட்டான்.

அவருடைய கல்லறைக்கருகில் அனதேல் பிரான்சு உணர்ச்சிமிக்க சொற்பொழி வாற்றினர். "நீதி உண்மை இவைகளைத் தவிர்த்து வேறெதுவும் அமைதியைவழங்காது, ஜோலா உலகஉணர்வின் ஆரம்பத்தைக் குறிப்பவர்."

இலக்கியத்தில் ஜோலா அவ்வுருடைய ஏடுகளின் அளவினல் மதிப்பெய்தவில்லை, எளியநடையில் ஒளிவிட்ட கருத்துக்களுக்காக, ஏழை எளியோரைப்பற்றித் தீட்டிய எழுத்தோவியங்களுக்காக, மூடத்தனம் வெளிவேடம், அநீதி, சுரண்டல் முறை, போர் இவைகளை எதிர்த்து எழுதியதற்காக மட்டுமல்ல, சமயம் நேர்ந்தபொழுது தனது தள்ளாத வயதில் பலமிக்க இராணுவம், அதிகாரமுள்ள அரசாங்கம் அனைத்தையும் எதிர்த்துத் தனியனாக நாட்டையும் வீட்டையும் விட்டோடிப்போராடிய திறத்திற்காக ஜோலா உலக வரலாற்றிலே இடம்பெற்று விட்டார். "பிரான்சு நாட்டிற்கு பலவகைகளில் தன்உழைப்பைச் செலுத்தலாம், ஒருவன் வாளேந்தியோ, பேனாவைப் பிடித்தோ தன் கடமையை நிறைவேற்றலாம் என் பங்கில் எமிலி ஜோலா என்ற பெயரை வருங்காலத்திற்கு வழங்குகிறேன், அது இரண்டிலொன்றை ஆராய்ந்து அடைவதாக" என்று ஜோலா கூறினர். வருங்காலம்—பின் சந்ததி ஜோலாவைத் தேர்ந்தெடுத்துள்ளது.

ஜோலா ஓய்வேயறியாத உழைப்பாளி. அவருடைய வாழ்வு ஏமாற்றங்கள் நிறைந்ததாயிருந்தது. குறிப்பாக பிரெஞ்சு இலக்கிய மன்றம் அவரைஉறுப்பினராகத்தேர்ந்தெடுக்க மறுத்தது. ஆனல் பிரெஞ்சு மொழி இலக்கிய ஆசிரியனாக வல்ல, உலக இலக்கியத்தில் உயர்ந்த இடத்தை ஜோலா அடைந்துவிட்டார்.

எதை எழுதுவது? என்றோர் நாள் நம் கவிஞருக்கு சந்தேகம் பிறந்தது. தாமரை தன் அழகைக் காட்டி, எழுதச் சொல்லிற்றும், காடும்கழனியும், கார்முகிலும், கலாப மயிலும், மயிலனைய மாதரும், செவ்வானமும் அன்னமும், வீரமும் பிறவும், என்னைப்பற்றி எழுது! என் எழிலைப்பற்றித் தீட்டு என்று கூவின. கவிஞர் கூறுகிறர் கேளுங்கள், ஜோலாவின் உணர்ச்சி அதிலே உள்ளதைக் காணுங்கள்;

"இன்னலிலே, தமிழ் நாட்டினிலே யுள்ள
என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கி யென்
ஆவியில் வந்து கலந்ததுவே!"

✻

## தமிழர் குடி அரசு

மொழிவாரி மாகாணங்கள் ஏற்படுவதால் மட்டும் தமிழர்க்குச் சுதந்திரம் கிட்டிவிடும் என்று எண்ணுவதில் பலனில்லை. வேற்றுமொழியினராலோ இனத்தினராலோ தமிழரும், அவர்தம் மொழியும், நசுக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தமிழ்நாட்டில் தமிழர் குடியரசு ஏற்படவேண்டும். அப்பொழுது தான் தமிழரது கலை, கைத்தொழில், நாகரிகம் எல்லாம் நன்கு வளர்ந்து முன்னணிக்கு வரமுடியும். தமிழ்நாடு, வடநாட்டார் ஆதிக்கத்துக்குட்பட்ட ஒரு மாகாணமாக இருக்கும்வரை, ஆசிய நாடுகளின் மகாநாட்டில் தமிழன் குரல் ஒலிக்க இடமேற்படுமா? தமிழனது பெருமை வாய்ந்த நாகரிகச் சிறப்பைப்பிறநாட்டார் அறிய இடமேற்படுமா? இந்தியாவின் மொழி இந்திஎன்றேற்படும் போது அங்கே தமிழ் தலை தூக்க முடியுமா?

ஐக்கிய இந்தியாவிலே இராமராஜ்யத்தைச் சிருஷ்டித்து அனுபவிக்க வாரீர் என்று சர்தார் பட்டேல் அழைக்கின்றர். ஆனல் தமிழர் வேண்டுவதும், தமிழர்க்குத்தேவைப்படுவதும் ஒரு குலத்துக்கொரு நீதி கூறும் மனுநீதியை அடிப்படையாகக்கொண்ட ராமராஜ்யமல்ல; பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவத்தை உலகுக்கு வழங்கிய வள்ளுவன் வகுத்த சமதர்மக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட தமிழர் ராஜ்யமேயாகும். எந்த நாளில் ஏகாதிபத்யம் வெளியேறுகிறதோ அதே நன்னளில் குமரியையும் வேங்கடத்தையும்எல்லையாகக்கொண்ட சுதந்திரத் தமிழ்நாடு தோன்றியே தீரவேண்டும். பொறுத்திருப்பதென்பது இனஉணர்ச்சியை நசுக்குவதற்கு ஆதிக்க வாதிகளுக்கு அவகாசம்தருவது போலாகும். வடஇந்தியாவின் வாலாகவே என்றென்றும் தமிழ்நாடு இருக்க வேண்டும் என்று எண்ணுவோர் கையில்தான் இந்தியாவின் அரசியல் தலைமை இருக்கிறது. எனவே, அவர்களது தயவில் சுதந்திர தமிழ்நாட்டைக் காண்பதென்பது கற்பனைக்கும் எட்டாத ஒரு காட்சியாகும்.

['செல்வி' நாகர்கோவில்]

5 உண்மைகள்!

1 குரு மருந்துகள்
ஆங்கிலம்—தமிழ் முறை கலந்தது.

2 குரு மருந்துகளின்
குணங்களை, லண்டன், அமெரிக்க கெமிகல் சொசைட்டியாரும் கூட ஒப்புக்கொள்கிறர்கள்.

3 குரு மருந்துகளில்
குரு தைலம் 1—8—0
குரு பற்பொடி 0—5—0

4 குரு மருந்துகளே
குடும்ப பொக்கிஷம்

5 குருமருந்துகளை
உங்கள் ஊர் மருந்து-ஷாப் வியாபாரிகளிடம் கேளுங்கள்.

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்
குரு மருந்து சாலை,
திருச்சிராப்பள்ளி

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ 7

ஏழை பங்காளர்

# எமிலி ஜோலா

★

"கொடுமை! கொடுமை!"

ஒருபெருமூச்சு.

"அக்ரமம்! அநீதி! அடுக்காது"

கண்ணீர் புரள்கிறது.

"எனக்கா இந்தக்கதி?"

ஏக்கமான பார்வை, கடலைக் கடந்துசென்று, பாரிஸ் பட்டணத்திலே, மாளிகை, மனைவி, மக்கள், உற்றார் உறவினர்மீது பாய்கிறது.

"ஒருகுற்றமும் செய்யாதஎனக்கு இந்தக் கடுந்தண்டனையா? நீதிக்காகப் போராடுபவர்கள் இல்லையா? நிரபராதியைக்காப்பாற்ற யாரும்இல்லையா? பொய்யை மெய்யென்றுக்கும்வஞ்சகரை வீழ்த்த ஒரு வீரன் இல்லையா? உண்மைக்காகப் பரிந்து பேச, யாரும் இல்லையா! ஏழைபங்காளர் பூண்டே இல்லையோ! ஒரு பிழையும் செய்தறியாஎன்னை இந்தத்தீவிலே தள்ளிய தீயர்களின் போக்கை, எதிர்க்கும் துணிவு கொண்ட ஒரு தீரன் இல்லையா! எல்லோருமா மண்டியிட்டு விட்டனர்? ஒருவர் இல்லையா உண்மை உரைக்க! என்பொருட்டுப் போரிட! நீதியைநிலைநாட்ட!

சோர்வு மேலிட்டுச் சாய்கிறான்! அவனுடைய உடை சுக்குநூறாகிக் கிடக்கிறது. ஒருகாலத்தில் ராணுவ உடைதரித்துக் கெம்பீரமாகப்பாரிசில் உலவியவன், ஆயுட்தண்டனை பெற்று, (அந்தமான்தீவு போன்ற) டெவில்ஸ் தீவிலே உழல்கிறான். அவன் செய்தகுற்றம் என்ன? அதைத்தான் அவன், தண்டிக்கப்பட்ட அன்றும் கேட்டான், தீவிலே ஒவ்வொரு நாளும், கேட்டபடி இருந்தான்; பதில்என்ன? காற்று ஏதோ பேசிற்று; புரியாத மொழி! அலைஒலித்தது, ஒலிதான், பொருள் இல்லை! அவனுடைய பெருமூச்சு ஒன்றுதான் புரியக்கூடிய மொழியாக இருந்தது. அனியாயமாகத் தண்டிக்கப்பட்டான், வஞ்சகரின் வலையில்சிக்கினான், வதைகிறான்; அக்ரமக்காரரின் இலக்காகி இம்சைப்படுகிறான். குற்றமற்றவன்; கொடுமை செய்கின்றனர் என்று தெரிவிக்கிறது பெருமூச்சு. அது, தீவில்! பாரிஸ் நெடுந்தூரத்தில் இருக்கிறது. பாரிஸ்............

தீவிலே, திக்கற்றநிலையிலே, தீயர்களின்சூழ்ச்சியினால்தண்டனைபெற்ற டிரைபஸ் "ஒருகுற்றமும் நான் செய்யவில்லையே" என்று, குமுறிக்கொண்டிருந்தான். அலைகடலிடையே உள்ள அந்தத் தீவிலே, அவன் ஆறுதல் கூறுவாரின்றி அவதிப்பட்டான். கண்ணெதிரே கடல்—கருத்திலேயும் கடல்தான், அலை அலையாக எண்ணங்கள். தாய்நாட்டுக்குத் துரோகம் செய்து, அரசாங்கத்தாரின், இராணுவ இரகசியத்தை வெளியிட்டான், என்று 1895-ல் குற்றஞ்சாட்டப்பட்டு, ஆயுட்தண்டனை தரப்பட்டவன் டிரைபஸ். அவன் மீது சுமத்தப்பட்டது, அபாண்டம் என்று நிரூபிக்கமுடியவில்லை—இடந்தரவில்லை. உண்மைக்குற்றவாளிகள் டிரைபசைப் பலியிட்டுச் சட்டத்தைச் சரிப்படுத்தி விட்டுத் தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர். அவன், தீவிலே திகைக்கிறான்; தீயர்கள் தேசத்தலைவர்களெனத் திகழ்கின்றனர். டிரைபசுக்காக, வாதிடயாரும் இல்லை! அவன்மனைவி ஓயாது அழுதாள். நண்பர்கள் கதறினர். ஆனால், அவன் பொருட்டுப்போரிட ஒரு மாவீரனும் தோன்றவில்லை. அவனுக்காகப் போரிட வேண்டுமென்றால், பலம் பொருந்திய பிரான்சு சர்க்காருடன் போர் என்று பொருள். வஞ்சனையில் கைதேர்ந்தவர்களுடன், புன்னகைப்புலிகள், நயவஞ்சக நரிகளுடன் போர் தொடுக்கவேண்டும். இணையில்லாதவீரம், ஏழைக்காக எதையும்சகித்துக்கொள்ளும்துணிவு, நீள்வையமே எதிர்த்தாலும் அஞ்சாமல்நீதிக்காகப்போரிடும்பண்பு, இவை வேண்டும்! போக போக்கியத்தில் புரண்டு கொண்டிருந்தவர்கள், ஏன் தமது சிறு விரலையும் தூக்கவில்லை! அவர்களின் அலுவல் அதுவா!! மது நிறைந்த கோப்பை, மதுரமொழி வழியும் அதரம், மயக்கமூட்டும்கண்கள், இவைகளில் மனதைப்பறிகொடுத்தவர்களுக்கு, ஒருடிரைபஸ் அக்ரமமாகத் தண்டிக்கப் பட்டது பற்றி என்னகவலை!

"பாபம்! டிரைபஸ், எவ்வளவோ கண்ணியமாக வாழ்ந்து வந்தவன், கெம்பீரபுருஷன்; அவன் கதிகடைசியில், ஆயுட்தண்டனை!"

"என்ன செய்யலாம். சட்டப்படி, உயர்தர நீதிமன்றத்தார் விசாரித்தல்லவா தண்டித்தனர்; அரசாங்கத்தின் இராணுவ இரகசியத்தையல்லவா, டிரைபஸ், வெளிப்படுத்திவிட்டான். சாதாரணக் குற்றமல்லவே!"

"செய்திருப்பானா? டிரைபஸ்உண்மையில் குற்றவாளிதானா?"

"இல்லாமலா, தண்டித்தார்கள். தக்க ருஜு இருந்ததால்தான் நீதிபதிகள் தண்டித்தனர்"

இவ்வளவுதான் டிரைபசைப்பற்றிய பேச்சு, மாளிகை, கொலுமண்டபம், நிர்வாக நிலையங்களில். இவ்வளவாவது, பேசப்பட்டதற்குக்காரணம், தீவாந்திரசிட்சைபெறுவதற்கு முன்பு டிரைபஸ், பாரிஸ் பட்டணத்தில், அதிகாரியாய், அந்தஸ்துடன் வாழ்ந்ததால்தான். நாதியற்றவனாகி,

தீவிலே நலிகிருன் டிரைபஸ், பாரிஸ் நகைமுகம் காட்டும் நங்கையாகவே திகழ்ந்தது; டிரைபசின் கண்ணீர் கடல் நீருடன் கலந்தது; "நான் குற்றமற்றவன்! நான் குற்றமற்றவன்—" டிரைபஸ், கூறுகிருன் தீவில். ஆதாரம் எங்கே? நீ நிரபராதி என்பதற்கு ருஜு எங்கே? என்று சட்டம் கேட்கிறது. டிரைபஸ், தன் இருதயத்தின் தூய்மையை எடுத்துக் காட்டுகிருன். சட்டம் சிரித்துவிட்டு, வேறு வேலையைக் கவனிக்கிறது. "நான்குற்றமற்றவன்" என்று டிரைபஸ் கூறிக்கொண்டிருந்தான் தீவில்; நாட்கள் மாதங்களாயின; ஆண்டுகள் உருளத் தொடங்கின; டிரைபஸ், கந்தலாடையில் இருக்கிருன். கண்கள் குளமாகிப், பிறகு வறண்டும்போயின, கைகால்கள் எலும்புருவாயின; கன்னத்தில் குழி, நடையில் தளர்ச்சி; டிரைபஸ், நடைப்பிணமானுன், ஈனக்குரலில் அப்போதும் கேட்டவண்ணம் இருந்தான், 'நான் செய்தகுற்றம்என்ன?' என்று.

• • •

டிரைபஸ் செய்த குற்றம் என்ன? அவன் நன்ருகப்படித்தவன்,—**குற்றம்**

சலியாத உழைப்பாளி-**குற்றம்**

உண்மையான சாட்சியங்கள் அவனுக்கெதிராகக் கிடைக்கவில்லை—**குற்றம்**,

அவன் கலங்காதவன்—**குற்றம்**

பாரிஸ் பட்டணத்திலே, ஒருமாவீரன் கிளம்பினுன், டிரைபஸ்செய்த குற்றங்களைக்கூற! இராணுவ இரகசியத்தை வெளியிட்டான் என்றுகுற்றம் சாட்டினுர்களே, அது அல்ல, அவன் செய்த குற்றம்; படித்தான், உழைத்தான், வஞ்சகருக்குஎதிராக வழக்குமன்றத்திலே வலிவு தேடிக்கொள்ளமுடியவில்லை; அதுதான்குற்றம், என்று இடித்துக்கூறினுன் அந்த இணையில்லாவீரன்.

மான், குற்றம் செய்யாமலா, புலியார் தண்டிக்கிருர்! என், மான் அழகான கண்களைக் காட்டிற்று? புள்ளிமான்துள்ளிவிளையாடுவதா! கள்ளங்கவடமற்று ஓடுவதா! சருகு உதிரும் சத்தம் கேட்டாலும், மருண்டு ஓடுவது ஒருகுற்றமல்லவா! சாதுவாக இருப்பது மற்ருேர் குற்றம்! பதுங்கிப்பாய்வது; பல்லால் கடிப்பது, நகத்தால் கிழிப்பது, இரத்தம்குடிப்பது, உறுமுவதுபோன்ற ஒருநற்பண்பும் இல்லை! இவைகளைப் பெறுதிருத்தல் குற்றமல்லவா? புலியார், எத்தனை குற்றங்களைததான் பொறுப்பார்! ஆகவேதான், குற்றம் செய்த மானைத்தண்டித்தார்!

டிரைபஸ் செய்த குற்றமும், இவ்விதமானதே!

இதனை, இறுமாப்பாளருக்குஇடித்துக்கூற, ஒருவர்தான் முன்வந்தார், ஒருபலனும் கருதாது முன்வந்தார், தன்தலைபோகுமே என்ற பயமின்றி முன்வந்தார், எதிர்ப்புச் சக்தியின் தன்மையையும் அளவையும்பொருட்படுத்தாது முன்வந்தார், நீதியைநிலைநாட்ட, கைவிடப்பட்டவனைக் காப்பாற்ற! ஒரே ஒருவர்தான் வரமுடியும்! ஒப்பற்ற உள்ளப்பண்புடையோர், பலராக இரார்! ஒரே ஒருவர்தான், அவர் தான் எழைபங்காளர் எமிலிஜோலா! பிரான்சுநாடு மௌனம் சாதித்தபோது, ஜோலா உண்மையை உரைத்தார், 'டிரைபஸ் குற்றமற்றவன்'

எமிலி ஜோலாவுக்குத்தவிர, வேறு யாருக்கும் அந்த உறுதியான உள்ளம் இருக்கமுடியாது. அநீதி, பெருநெருப்பெனக் கொழுந்துவிட்டெரியும்போது, அதனை அணைக்கத்துணிவது, அனைவருக்கும் சாத்தியமாகக் கூடிய செயலல்ல! ஜோலாவால் முடியும்! ஜோலா அப்படிப்பட்டஆற்றல் படைத்தவன், அவனுடைய பேனு "நாஞ," வுக்காகப் போராடிற்று. நானு, 'கேவலம்'ஒரு வழுக்கிவிழுந்தவனிதைதான். அவளுக்காகப்போராடியஜோலாவால்தான்டிரைபஸ்விஷயமாகவும் போராடமுடியும்; போராடினுர்—வாழ்க்கை முழுவதுமே வறியோருக்காகவே போராடிய வீரர் ஜோலா. தனக்காகப் போராடும்படி டிரைபஸ் ஜோலாவைக் கேட்டுக்கொள்ளவில்லை. அவன் அநீதிக்காரரால் அவதிக்கு ஆளாக்கப்பட்டான் என்று அறிந்தார், ஆவேசம் பெற்ருர், ஆற்றல் அவ்வளவையும் செலவிட்டார், "நீதி" வெளிவந்தது.

"நானு" சம்பவமும் அப்படிப்பட்டதே.

ஜோலா, அவனது நண்பனுடன் மிக மிகச்சாமான்யர்கள்மட்டுமே செல்லும் சிற்றுண்டிச்சாலையில் சாப்பிட்டுக்கொண்டிருந்தார், ஒருநாள்; திடீரென்று கூக்குரல் கேட்டது.

பெண்களின் அலறலொலி நாலாபக்கங்களிலிருந்தும் கிளம்பியது. ஜோலாவும் நண்பனும்ஜன்னலோரத்தில் சென்றபொழுது ஏராளமான பெண்கள், விரட்டுகிற போலிசிடமிருந்து தப்பி அங்குமிங்கும் சிதறிக்கொண்டிருந்தனர். விபசார விடுதிகளில் போலீசார் நுழைந்து விரட்டினர், விபசாரத்தையல்ல, விபசாரிகளை!!

மேல்மூச்சு வாங்க ஒரு இளமங்கை அந்தக்கடைக்குள்நுழைந்து, ஒரு தூணுக்குப் பின்னுல் மறைந்துகொண்டாள். பயத்தாலும் திகிலாலும் அலைக்கப்பட்டஅந்தமங்கையை ஜோலா தன்னருகில் அழைத்தான். பயத்துடன் அவள்மெதுவாக அவன் பக்கத்திற்கு வந்தாள்; எனினும் போலிஸ்காரன் கடைக்குள் நுழைந்ததும் தப்பியோட அவள்முயன்ருள். ஜோலா அவள் பக்கம் சென்று, அவள் தன்னைச் சேர்ந்த நண்பர் எனக்கூறிப்போலிஸ்காரனைஅனுப்பிவிட்டான். பிறகு மூவரும் நாற்காலிகளில் அமர்ந்தனர். வறுமை எவ்வளவு வாட்டியபோதிலும், விடாத அழகின் சாயல் அவள் முகத்தில் இருந்தது. அவளுடையஇழிதொழில் அவளை முற்றும் சிதைக்கவில்லை. ஜோலாவின் நண்பன் ஒரு ஓவியக்காரன், அவன் அவளுடைய உருவத்தை அங்கேயே தீட்ட ஆரம்பித்தான், ஜோலா அவளுடையவரலாற்றைக் கேட்க ஆவலுள்ளவனுயிருந்தான். மிக வணக்கத்துடன் "உங்கள் பெயரென்ன அம்மா" எனக் கேட்டான் ஜோலா. பெயரா? அவள் வாழ்ந்த ஒவ்வொரு ஊரிலும் அவளுக்கு ஒவ்வொரு பெயர் இருந்தது. பெயர்களைக் கூறிவிட்டு, "ஏன்கேட்கிறீர்கள்" எனக்கேட்டாள். 'நானும் உங்களைப்போலஒருவன்தான்அம்மா' எனக் கூறிவிட்டு, பணியாளனைக் கூப்பிட்டு அவளுக்குச் சிற்றுண்டியளிக்கச் சொன்னுன்.

அவள் தூரத்துக் கிராமத்தைச் சேர்ந்தவள். பாரிசுக்கு வரும்பொழுது அவளதுவயது பதினேழு. கையில் காசு கிடையாது. இளமையும், எழிலும்தான் மிஞ்சியவை. வாழ்வு! அது ஏதோ அவளால் கனவு காணப்பட்ட பொருள். தன் பழைய நினைவுகளைக் கூறும்பொழுது சொற்கள் தழுதழுத்தன; நீர்த்துளி படர்ந்த கண்கள் சொற்ருெடர்களை முடித்தன. அவளுடைய தாயகம் அங்கே செல்ல முடியாது. குளிர், பிணி, பட்டினி—இவைகளால் வேட்டை

(13-ம் பக்கம் பார்க்க)

# அவர்களுக்கே முதல் இடம்

(நக்கீரன்)

பார்ப்பனரின் உயர்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பெரியபுராணம் பாடப்பட்டதென்பதற்குப் பெரியபுராணத்திலிருந்த எத்தனையோ மறுக்கமுடியாத மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளக்கமான ஆராய்ச்சிகள் பல எழுதினேன். இதுவரை எழுதிவந்த விளக்க ஆராய்ச்சிகளால் தெளிவு பெறாமல் அல்லது தெளிவு பெற விருப்பம் இல்லாமல் இருக்கும் அன்பர்களுக்கு இன்னொரு விளக்கமும் தருகிறேன். இந்த விளக்கம், உண்மையை ஒப்புக்கொள்ள விரும்பாத பிடிவாதப்பிடியினருக்குக் கூடச் சிறிதளவாவது சிந்தனைக்கு வேலை கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. அதாவது,

காஞ்சிபுரத்திற்கு அண்மையிலே உள்ள திருநின்றவூரிலே பூசலார் என்னும் பெயருடைய பார்ப்பனர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு சிவன் கோயில் கட்டவிரும்பினார். ஆனால், கோயில் கட்டுவதற்கு வேண்டிய பொருள் அவரிடம் இல்லை. என்ற போதிலும் எப்படியாவது கோயில் கட்டியாக வேண்டுமென்ற உறுதிப்பாட்டில் மனம் தளராமல் இருந்தார். உடனே அவருக்கு ஒரு எண்ணமுண்டாயிற்று. அதாவது நினைவினால் கோயில் கட்டுவதென்ற முடிவுக்கு வந்தார். மனதினாலே அடிகோலினார்; கோயில் உறுப்புக்களை எல்லாம் அமைத்தார்; மதில் முதலியன வகுத்தார்; கிணறு குளம் முதலியன எடுத்தார், கோயில் கட்டும் வேலை முடிந்தது. சிவனை அக்கோயிலில் எழுந்தருளப் பண்ணிக் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) செய்வதற்கும் நாள் நிச்சயம் செய்து கொண்டார்.

இங்கிவ்வாறாகக், காடவமன்னன் என்பவன் காஞ்சிபுரத்திலே, பெருந்தொகைப் பொருள் செலவுசெய்து ஒரு கோயில் கட்டினான். அந்தக் கோயிலுக்கும் குடமுழுக்குச்செய்ய நாள் குறிக்கப்பட்டு விட்டது. பிரதிட்டைநாளுக்கு முன்னாள் இரவு, சிவன், காடவமன்னன் கனவில் தோன்றித், "திருநின்ற ஊரிலே பூசல் என்பவன் ஒருவன் இருக்கிறான். அவன் நீண்டநாள் நினைந்து நினைந்து ஒரு கோயில் கட்டியுள்ளான். நாளை நாம் அதில் எழுந்தருள்வோம். ஆதலால் உனது ஆலயப் பிரதிட்டையைப் பின்னொருநாள் வைத்துக்கொள்" என்று கூறி மறைந்து விட்டார் என்பதாகும்.

இந்நிகழ்ச்சி, கடவுள் இலக்கணப்படி, கடவுள்தன்மைக்கே இழுக்கை உண்டாக்குவதாகும் என்பது ஒருபுறமிருக்கத், தமிழ்மக்களை வேண்டுமென்றே இழிவு படுத்திக்காட்டுவதற்காகவே சேக்கிழார் இந்நிகழ்ச்சியைப் பெரியபுராணத்தில் புகுத்தியுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது. எப்படியென்றால், காடவமன்னனால் பெருந்தொகைப் பொருட் செலவில் கட்டப்பட்ட கோயிலில் சிவன் முதலில் எழுந்தருள மறுத்துப், பூசலாரால் கட்டப்பட்ட மானதக்கோயிலில் எழுந்தருளுகிறார். ஏன் அவ்விதம் நடந்து கொண்டார் சிவன்? பூசலாராவது, கோயில் கட்டவேண்டுமென்று எண்ணினார்? பொருள் கிடைக்கவில்லை; எனவே, தம்முடைய எண்ணத்தைக் கோயில் கட்டுவது போன்ற உருவகப்படுத்தி; மனதினாலேயே கட்டினார். ஆனால் காடவமன்னன் கோயில் கட்டவேண்டுமென்று எண்ணியபடி, அதற்கான முயற்சிகளெல்லாம் குறைவறச்செய்து கோயிலைக் கட்டி முடித்தான். பூசலாருக்கு இருந்தது போலவே, காடவமன்னனுக்கும் கோயில் கட்டவேண்டுமென்ற எண்ணமும் விருப்பமும் இருந்தது. கோயில் கட்டவேண்டுமென்ற எண்ணமும் விருப்பமும் இல்லாத ஒருவன், அந்த வேலையை ஒருபோதும் செய்திருக்கவேமாட்டான்.

எனவே, பூசலாருக்குமட்டும் கோயில் கட்டும் விருப்பம் இருந்தது, காடவமன்னனுக்கு அந்த எண்ணம் இருந்ததில்லை என்று கூறிவிடமுடியாது. எண்ணமின்றிச் செயல் ஒருபோதும் நிகழ்வதில்லை. ஒன்றைச்செய்வதற்கு முன்னர், அதனைச்செய்ய வேண்டுமென்ற எண்ணமே எவருக்கும் உண்டாகும். உண்டான எண்ணத்தை உருவாக்குவதற்கே செயல் என்று பொருள். எனவே, கோயில் ஒன்று கட்டவேண்டுமென்று பூசலாருக்கு உண்டான விருப்பத்தைப் போலவே காடவமன்னனுக்கும் உண்டாகியிருக்கும். கோயில் கட்டவேண்டுமென்ற விருப்பத்தில் காடவமன்னன் களங்கமற்றவனாய் இருந்தான் என்பதற்குச், சிவன் அவன் கனவில் தோன்றி, "உன்னுடைய கோயிலுக்கு இன்னொருநாள் வருகிறோம், நாளை பூசலார் கோயிலுக்குப் போகிறோம்" என்று கூறியதே போதிய சான்றாகும். அப்படியிருந்தும் பூசலாரால் கட்டப்பட்ட கற்பனைக் கோயிலுக்கே கடவுள் முதலில்எழுந்தருளுகிறார். அதிலும், உண்மையான கோயில் கட்டிய காடவமன்னன் கனவில்தோன்றி, 'முதலில் பூசலார் கட்டிய கோயிலுக்கே செல்வேன், பின்னரே உன் கோயிலுக்குவருவேன்' என்று கூறுகிறார். ஏன் இவ்வாறு கூறினார்? சிவனிடம் பூசலார் கொண்டிருந்த அன்பைவிடக், காடவமன்னன் கொண்டிருந்த அன்பு அளவிலும் எடையிலும் குறைந்தது என்று கூற முடியுமா? கோயில் கட்டுவதில், பூசலாரைப் பார்க்கிலும் காடவமன்னன் எடுத்துக்கொண்ட முயற்சியே அதிகம். ஆண்டவனுக்கு ஆலயம் அமைக்க வேண்டுமென்று காடவமன்னனுக்கு உண்டான எண்ணம், பூசலாருக்கு உண்டான எண்ணத்தைப்போல் கற்பனையாக இல்லாமல் கருத்தொருமித்த செயலோடு கூடியதாகவே இருந்திருக்கிறது. என்ற போதிலும், ஈசனுக்குப் பூசலார்மீதே பாசமும் நேசமும் உண்டாகி, அவரால் கட்டப்பெற்ற கற்பனைக்கோயிலையே தாம் எழுந்தருளும் இடமாகக் கொண்டிருக்கிறார். சிவனுக்கு பூசலாரிடம் இத்தகைய அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? சிவன் பூசலாரின் கையாளானதற்குப், பூசலார் ஒரு பார்ப்பனராய் இருந்ததே என்பதைத் தவிர வேறு யாதாயினும் காரணம் காட்ட முடியுமா? யார் எந்தக் காரியத்தைச் செய்த போதிலும், பார்ப்பனர் அதில் ஈடுபட்டிருந்தால், முதலிடம் பார்ப்பனருக்கே அளிக்கப்பட வேண்டுமென்ற "ஒழுங்கு முறைக்" கட்டுப்பாட்டின் படியே சிவன் முதலில் பூசலார் கட்டிய கோயிலில் எழுந்தருளினார்.

இனிப், 'பூசலாரும், காடவமன்னனும் தங்கள் கோயிற்குடமுழுக்கை ஒரே நாளில் ஒரே வேளையில் வைத்துக்கொண்டால், சிவனால் இரண்டு கோயில்களுக்கும் ஒரே காலத்தில் எப்படிப் போக முடியும்? ஏதாவது ஒன்றுக்குத்தானே போகமுடியும்!' என்பதாகச் சிலர் நினைக்கக்கூடும்.

அப்படி நினைப்பவர்கள், சிவனாரின் 'ஆற்றலை' அறியாதவர்களே. சிவனுடைய ஆற்றலைப் பற்றிக் கூறும் நூல்கள் எல்லாம், அவரை, அங்கிங்கெனாதவராய்—எல்லாமாய்—எங்குமாய் — எப்போதுமாய் — நீக்கமற நிற்கும் ஒரு பெரும் பொருள் என்றன்றோ விளக்கியுள்ளன. இப்படிப்பட்ட பெருமித விளக்கம் அளிக்கப்பட்ட சிவ ஆற்றலைக் குறைத்துப் பேசுவது, உண்மையிலேயே கடவுள் இலக்கணத்தை இழிவுபடுத்துவதாகும். கடவுளுக்கு இலக்கணம் கூறியவர்கள், அவருடைய ஆற்றலை அளந்துதானே கூறியிருப்பார்கள். அப்படியிருக்கப், பூசலாரின் அழைப்பை ஏற்றுத் திருநின்றவூருக்குப் போன சிவனால், காடவ மன்னனின் அழைப்பை ஏற்றுக் காஞ்சிபுரத்திற்கு வரமுடியாது போயிற்று என்று எப்படிக் கூறமுடியும்? இன்றுங்கூட, நம் நாட்டில் எத்தனையோ இடங்களில் கோயில்கள் கட்டப்பட்டுக் குடமுழுக்குகள் நிகழ்த்தப்படுகின்றன! ஒரே நாளில்—ஒரே வேளையில்—ஒரே இலக்கினத்தில் இரண்டு மூன்று ஊர்களில் பிரதிட்டை விழா நடைபெறுவதையும் பார்க்கின்றோம். என்றாலும், பூசலார் வரலாற்றில், சிவன் ஏதாவது ஒரு கோயிலுக்குத்தான் போக முடியும் என்றுகூறப்பட்டிருக்கிறது. இந்த உண்மை இன்று கோயில்கள் கட்டிக் குடமுழுக்குச் செய்வோருக்குத் தெரியாது போலும்! தெரிந்திருந்தால், "ஓகோ! இன்று நம்ம அரு—சு—பழ—செட்டியார் செவ்வியூரில் கட்டிய சிவன் கோயிலுக்குப் பிரதிட்டை நடக்கப்போகிறதாம், என்று, மங்கையூரில் மகேசுவரன் கோயிலைக் கட்டிய மகிபாலன் செட்டியார் தம்முடைய கோயில் பிரதிட்டை விழாவை வேறொரு நாளில் வைத்துக்கொள்வோம்" என்று மாற்றி வைத்துக் கொள்ளப் படுகின்றதா? இல்லையே! இனி, ஒருகால், ஒரு செட்டியார்கோயில்கட்டிக் குடமுழுக்குச் செய்வதற்கு நாள்குறித்த செய்தி இன்னொரு கோயில் கட்டிய மற்றொரு செட்டியாருக்குத் தெரியாது, எனவே இருவரும் ஒரே நாளில் பிரதிட்டை விழாவை வைத்துக்கொண்டனர் என்று சொல்வதற்கும் இல்லையே. 'பூசலார் கட்டிய கோயிற் பிரதிட்டை விழாவுக்கு இன்று நான் போகவேண்டியிருப்பதால், உன்னுடைய கோயிற் பிரதிட்டை விழாவை இன்னொருநாளில் வைத்துக்கொள்' என்று காடவ மன்னன் கனவில் தோன்றிக் கட்டளையிட்ட சிவன், அதுபோலவே, செட்டியார்கள் இருவரில் யாராவது ஒருவருக்குக் கனவிலே தோன்றி, "ஓய் மகிபாலன் செட்டியாரே! இன்று அரு—சு—பழ—செட்டியார் செவ்வியூரில கட்டிய கோயிலுக்கு நான் போகவேண்டியிருப்பதால், உம்முடைய கோயிற்பிரதிட்டை விழாவை இன்னொரு நாளில் வைத்துக்கொள்ளும்" என்று சொல்லியிருக்கலாமே! அப்படிச் சொல்லி, இரு வேறு ஊர்களில் நடக்க இருந்த குடமுழுக்கு விழாக்களில் ஒன்று நாள் மாற்றி வைக்கப்பட்டதென்ற செய்தி ஏதும் இன்று கிடைப்பதில்லையே! காடவ மன்னன் கனவில் தோன்றிய கடவுள், மகிபாலன் செட்டியார் கனவில் தோன்றாத காரணம் என்ன? மகிபாலன்செட்டியாருக்குப் போட்டியாக எந்தப் பார்ப்பனனும் மனக் கோயில் கட்டவில்லை என்பதைத் தவிர இதற்கு வேறேதாவது காரணம் கூறமுடியுமா? பார்ப்பனரின் பாதுகாவலனான பரமன் செட்டியாரைச் சட்டை பண்ணி அவரையும் தம்முடைய அன்பர் குழாங்களில் ஒருவராக மதிப்பார் என்று எதிர்பார்க்க முடியுமா?

எனவே, பார்ப்பனர் ஏதாவது ஒரு காரியம் கடவுளுக்குச் செய்ய வேண்டுமென்று மனதினால் நினைத்துவிட்டால் போதும், உடனே அந்தக் காரியம் அவர்களால் செய்யப்பட்டுவிட்டதாகக் கருதி, அவர்களுக்கு உயர்வும் மதிப்பும் அளிப்பதற்காகவும், பார்ப்பனரல்லாதார் ஏதாவது ஒரு காரியம் செய்யவேண்டு மென்று மனதினால் நினைத்து விடுவதோடு மட்டும் நின்று விடாமல், எப்படிப்பட்ட அரும் பெரும் முயற்சிகள் எடுத்து, அளவுகடந்த பொருளைச் செலவிட்டு அந்தக் காரியத்தைச் செய்து முடித்தாலும் அவர்களுக்கு உயர்வோ மதிப்போ கொடுப்பது சைவசமயக் கோட்பாட்டிற்கே மாறுபட்டதாம் என்பதை எடுத்துக்காட்டவுமே பூசலாரின் வரலாறு பெரிய புராணத்தில் புகுத்தப்பட்டதென்று கூறுவதை யாராவது தவறென்று தள்ளிவிட முடியுமா?

இனி யான் இங்ஙனம் கூறுவதைத் தவறென்றோ, தகாதென்றோ யாராவது கருதுவார்களானால், அத்தகையினர் இன்னும் ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும். அதாவது, பூசலார் என்ற பார்ப்பனர் கட்டிய மானதக் கோயிலைக் கண்டு மகேசுவரன் எப்படியோ மயங்கி விட்டார் என்பது உண்மையாயின், வரலாறு மேலே தீட்டியுள்ளது போல் இருந்திருக்கவேண்டிய இன்றியமையாமையே இல்லையன்றோ! "திருநின்ற ஊரிலே பூசலார் என்ற பூசுரர் ஒருவர் இருந்தார், அவர் ஒரு கோயில் கட்ட விரும்பினார், அதற்காகப் பொருள் தேட முயன்றார், பொருள் கிடைக்கவில்லை, என்றாலும், தமுடைய அவாவை மானதக் கோயில் கட்டியாவது தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணினார், அதன்படியே, அதற்கு வேண்டிய பொருளகள் அனைத்தையும், அதனைச் செய்து முடித்தற்குரிய தச்சர் முதலாயினோரையும் மனத்தால் தேடி நினைவால் செய்து முடித்தார், பூசலாரின் மாசற்ற இந்த அன்பைக் கண்ட சிவனும் அவரால் கட்டப் பெற்ற நினைவுக்கோயிலில் நெடிது வீற்றிருந்தருளினார், என்னே! பூசலாரின் அன்பின் திறம்!" என்ற அளவில் சேக்கிழார் அந்த வரலாற்றை முடித்திருக்கலாம். ஏன் இந்த வரலாறு இப்படி எழுதப்பட்டதென்று எந்த எம்பிரான் அன்பரும் சேக்கிழார் மீது பாணந்தொடுக்க மாட்டார்கள். அறுபத்து மூன்று நாயன்மார்களிற்பலர், வறிதே "சிவ சிவா" என்று சொல்லிக்கொண்டு இருந்த காரணத்தாலேயே சிவனுடைய திருவடி நீழலை அடைந்தனர் என்று 'வரலாறு' எழுதிய சேக்கிழார், பூசலார் வரலாற்றையும் நான் மேலே தீட்டியுள்ளது போல் எழுதி முடித்திருக்கலாம். அதற்காக யாரும் அவர் மீது குற்றம் சாட்டமாட்டார்கள். அங்ஙனமன்றி, எங்கோ இருந்த காடவ மன்னனைப் பூசலார் வரலாற்றில் இழுத்துக்கொண்டு வந்துநுழைத்து, அவன் கட்டிய கோயிலைப் பார்க்கிலும் பூசலார் கட்டிய கோயிலே சிறந்ததென்று காட்டி, 'உன்னுடைய கோயிலுக்கு இன்னொரு நாள் வருவோம், இன்று பூசலார் கோயிலுக்குப் போகின்றோம்' என்று சிவனார் கூறியதாகக் கதைகட்டித் தமிழ் மக்களை வேண்டுமென்று இழிவுபடுத்தும் முறையைச் சேக்கிழார் ஏன் கையாள வேண்டுமென்பதையாவது என்மீது காரணமின்றிக் காயும் கண்ணியர்கள் தங்கள் கருத்தைச் சிறிது விரிவுபடுத்தி எண்ணிப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

# ஆதிக்க வேட்டை

—(o)—

விஞ்ஞானத்தின் விளைவு சுகபோகிகள் கையில் சிக்கிவிட்டது. மக்கள் உழைப்பைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்கும் சாதனங்கள் பலவும் சிலரிடமே குவிந்துவிட்டன. மக்களின் நல்வாழ்வு இவர்களின் லட்சியமாக இருக்கவில்லை. 'லாபம், லாபம்' இதுவே அடிப்படையாகப் போய்விட்டது. 'பசி பசி' எனும் ஏழைகள் அழுகுரல் இவர்கள் செவி புகவில்லை. வேலையின்றித் தவிக்கும் மக்களின் வேதனைச் சொல்லும், இவர்கள் இருதயத்தைத் தீண்டவில்லை.

உலகத்திற்கு ஹிட்லர் தந்த பரிசு பலப்பல. ஐரோப்பிய நாடுகள் பலவற்றையும் சுடுகாடாக்கினான். பிணவாடை வீசும் பெருங்காடாக்கினான். கொன்றுகுவித்தான் மக்களை, அகில உலகிலும் ஆரியஆட்சியை அமைக்க. கருணையின்றிக் குழந்தைகளைக் கொன்றான். வாலிபர்களைப் பலியாக்கினான். வயோதிகர்களை வீழ்த்தினான். இரத்தச் சேற்றிலே திளைத்தான். ஏற்படுத்திய நாசத்தைக் கண்டுகளித்தான். பிறருக்கு வெட்டிய படுகுழியில், தானும் இறுதியில் மறைந்தொழிந்தான்.

ஜெர்மன் மக்களுக்குக் கொடுத்த, சுகவாழ்வு வாக்குறுதி நிறைவேறவில்லை. நிறைவேற மார்க்கமும் அவன் திட்டத்தில் கிடையாது. வறுமை—பஞ்சம்-தொத்து நோய்-வேலையின்மை முதலியனதான் ஹிட்லர் தந்த பரிசு. பொதுவுடைமைப் பூச்சாண்டியைக் கிளப்பியே அவன் ஆதிக்கம் பெற்றான். அத்தத்துவத்தைத் தொலைக்கவே ஆண்டவன் தன்னை அனுப்பி இருப்பதாக மக்களை நம்புமாறு செய்தான். முன் மகா யுத்தத்தின் பலனாக ஜெர்மனி இழந்த குடியேற்றநாடுகளை, மீண்டும் பெறவேண்டும் எனும் பேச்சிலே ஜெர்மன் மக்களைமயக்கினான். 'வாழ இடம் வேண்டும்' எனும் பேச்சைத் தனது அக்கிரமப் போருக்குப் பின்பலமாக்கிக் கொண்டான்.

முளையிலே கிள்ளிஎறிந்திருந்தால், உலகுக்கு இந்த நாசம் ஏற்பட்டிருக்காது. புரட்சிக்குப்பயந்த பிரான்ஸ், ஹிட்லரைப் புகலாகக் கொண்டது. பொதுவுடைமையை வெறுத்த பிரெஞ்சுப்பிரபுக்கள், ஹிட்லர்பலம் பெறுவதற்கு வழி செய்தனர். இரஷ்யப் போக்குப் பிடிக்காத பிரெஞ்சு பிற்போக்கு வாதிகள், அதனைத் தடுக்க ஹிட்லரை ஆயுதமாக உபயோகித்தனர்.

செல்வாக்குத் துலாக்கோலை நம்பி வாழ்ந்து வந்த இங்கிலாந்தும், ஹிட்லர் போக்கைக் கண்டிக்க முனையவில்லை. இரஷ்யச் செல்வாக்கை ஐரோப்பா முழுவதும் பரவவிடாமல்தடுக்க, ஹிட்லர்எழுச்சியைசாதகமாக்கிக் கொள்ளலாமென்று இங்கிலாந்து மனப்பால்குடித்தது. ஆரம்ப முதல் முனிச் ஒப்பந்தம் வரையில், விட்டுக்கொடுத்து விவகாரம் பேசுவதையே பெரும் பணியாகக் கொண்டிருந்தது.

ஹிட்லர், தனது ஆசையை மறைத்துவைத்திருக்கவில்லை. தனது போர் நோக்கத்தைப் பலர் அறிய, முன்னரே புத்தகவடிவில் உருவாக்கி இருந்தான். ஏகாதிபத்திய அரசுகளுக்கு இது தெரியாததுமல்ல. தெரிந்தும் நாசக் கருத்தை வளரவிட்டன. பழமையில் உள்ள மோகம், சுகபோகத்திலே உள்ள பேராசை, புரட்சியிலே உள்ளபயம், புது சமுதாய அமைப்பிலே உள்ள வெறுப்பு, அரசியல் ஆதிக்கத்திலே உள்ள வெறி, ஏகாதிபத்தியங்களை, ஹிட்லருக்கு ஆதரவு காட்டச் செய்தன.

அமெரிக்காவின்போக்கேஅலாதி. ஐரோப்பா விவகாரத்தை ஒதுக்கியே வைத்திருந்தது. இருந்தாலும் வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாகத்தான் இருந்தது. ஹிட்லர் பலம் பெற்றதற்கு அமெரிக்காவின் பங்கும் வேண்டிய அளவிற்கு இருந்தது.

எந்த ஏகாதிபத்யத்தைக் காப்பாற்ற இங்கிலாந்தும், பிரான்சும் ஹிட்லருக்கு ஆதரவு காட்டினவோ, அந்த ஏகாதிபத்யம் ஹிட்லரால் சிதைக்கப்பட்டது. சரிந்தகோட்டையாகப்போய்விட்டது பிரெஞ்சு ஏகாதிபத்யம். பாழடைந்த மண்டபமாகக் காட்சியளிக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். பெயரளவில்கூட 'வல்லரசுகள்' பட்டியிலே பிரான்ஸ் இன்று இல்லை. பிரிட்டனோகடனாளி; 'படுக்கையிலே கிடக்கும் நோயாளி. அமெரிக்க பக்கம் ஆதரவு காட்டுவதா—ரஷ்யாவுடன் சேர்ந்து நிற்பதா—இரண்டு நாடுகளுக்கும் இடையில் நின்று சமரசம் பேசுவதா—எனும் இதுபோன்ற பிரச்னைகள் பிரிட்டனைத் திக்குமுக்காடச் செய்கின்றன. ஒருகணம் அமெரிக்காவிற்குச் சாமரம் வீசுவதும், மற்றோர் கணம் ரஷ்யாவிற்குக் காவடி தூக்குவதாக இருக்கிறது பிரிட்டன். நிலைதெளிவில்லை; வெறும்தடுமாற்றம்.

போரின் பலனாக ஐரோப்பாவில் புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பிரான்சில் பழமை விரும்பிகள் மண்ணைக்கவ்வினர். சமதர்மிகள் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த போதிலும் உள்நாட்டுக் குழப்பம் தீர்ந்தபாடில்லை. பஞ்சம் நாட்டை அரித்துத் தின்கிறது. கட்சிப்பிணக்கும் பலமாக இருக்கிறது. அரசனின் மமதையை ஒழித்து, ஆதிக்கக்காரர்களின் ஆணவத்தை அழித்து, புரட்சியின் போக்கை உலகிற்கு உணர்த்திய பிரான்சில் இன்றுபெரும் போக்கு இல்லை. பகையும் பிணக்கும் தான் தலைவிரித்தாடுகிறது. சண்டையால் சிதறுண்ட பொருளாதாரம், சீர்படப் பலகாலம் பிடிக்கும். ஏகாதிபத்திய ஆசை, ஆளுவோரைப் பிடித்து ஆட்டுகிறது. நெருக்கடியான நிலைமை.

மூர்க்கன் முசோலினியின் பிடியில் சிக்கிய இத்தாலிக்கு விடுதலை கிடைத்தும், விமோசனம் பிறக்கவில்லை. ஆட்சியிலே மாற்றம் ஏற்பட்டும் அடிப்படையில் மாறுதல் இல்லை. கட்சிகளிடையே பலபரிட்சை நடந்தவண்ணமிருக்கிறது. தம்மிச்சையாக நடக்கத் தகுதிஇல்லை. எடுப்பார் கைபிள்ளையாகவே இருக்கும் நிலை. முசோலினியால் கிடைத்தவரம்பிரசாதம்!

ஸ்பெய்னோ, பழைய மெருகுகலையாமல் காட்சி அளிக்கிறது. ஆட்சித்தலைவனாக ஒரு அரசனை ஏற்படுத்தி இருக்கிறான் பிராங்கோ. இவன் ஆகாத போக்கிற்கு அரசன் ஒரு முகமூடி. இத்தாலியிலே எமான்யுல் அரசன் பெற்றிருந்த உரிமையை எவர் அறியார்? பிராங்கோவின் போக்கை அதட்டிக்கேட்க பிரிட்டனுக்கு நாவெழவில்லை. உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக்கூடாதென்னும் தப்பிலித்தனத்தை, தனக்குச் சாதகமாக அமெரிக்கா உபயோகித்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசியல் தத்துவஞானி பிளாட்டோ பிறந்த மண்ணில், மீண்டும் முடியாட்சி ஏற்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்டுகளுக்கும் அதிகாரத்திலுள்ள பழமை மோகிகளுக்கும் தாக்குதல் தினசரி நடைபெறுகிறது. அமெரிக்கா, போர்க்கருவிகளை அமோக

(12-ம் பக்கம் பார்க்க)

**14ல**
**ஜூலை**
**திருச்சியில்**
**நீதிதேவன்**
**மயக்கம்**


# திராவிட நாடு

காஞ்சி] 22—6—47 [ஞாயிறு


## பழியும் பலியும்

✲

**2**

### வெற்றி அவரை நாடிவந்தது!

எத்தனையோ விதமான எதிர்ப்புச் சக்திகள் இருந்தும், உறுதியின் சின்னமாக விளங்கிய ஜனாப் ஜின்னாவை நாடி வெற்றிவந்தது. 'பாரதவர்ஷம்' என்ற பெயர் மறைந்து, பாகிஸ்தான்—இந்துஸ்தான் என்ற பெயர்கள் இன்று உலவுகின்றன.

இந்த வெற்றி சாமான்யமானதென்று குறைத்து மதிப்பிட்டும், வெற்றி நிரந்தரமானதல்ல என்று "சபித்தும்," வெள்ளைக்காரன்உதவியால் கிடைத்த வெற்றி என்று பேசி அதன் சிலாக்கியத்தைக்குறைத்தும், இந்த வெற்றி ரஷியாவுக்கு விருந்து என்று ராஜதந்திரப் பேச்சுப் பேசியும், இங்ஙனம் பலவேறு வகையிலே பேசி தங்கள் மனதிலே மூண்டெழும் கோபத்தையும் துக்கத்தையும், அடக்கிக் கொள்ளக்காங்கிரஸ்அன்பர்கள்முயல்கிறார்கள். அவர்களின் மனக்குமுறலை நாம் உணர்கிறோம்—அனுதாபப்படுகிறோம். தங்கள் மனதிலே அவர்கள் அனாவசியமாக ஓர் தவறான கருத்தை வளர்த்துக்கொண்டார்கள்—அக்கருத்து வளரவளர அவர்கள் அதன் மயக்கத்திலாழ்ந்தார்கள்—கற்பனை உலகிலே நடமாடிக்கொண்டிருந்தஅவர்களுக்கு, திடீரென்றுஓர் இரவு, டில்லிரேடியோவிலிருந்துபாகிஸ்தான் ஜிந்தாபாத்என்ற முழக்கம் வெளிவந்தால், தூக்கிவாரிப்போட்டுத் தானே இருக்கும், பாபம். கடந்த ஏழுவருடங்களுக்குமேலாக, பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற முழக்கம் ஆயிரமாயிரம் மேடைகளிலே கிளம்பியபோது, கேலி செய்தே பழக்கப்பட்டவர்கள், அன்று, ஆனந்தத்துடன், அதிகாரத்துடன், ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் ஜிந்தாபாத், என்று முழக்கமிடக் கேட்டால், உள்ளபடி அவர்கள் உள்ளத்திலே புயல் கிளப்பித்தானே இருக்கும். அதிலும், பத்து நிமிடங்களுக்கு முன்பு, பண்டித ஜவஹர் "ஜெய் ஹிந்" கோஷத்தை அதே ரேடியோ மூலம் செய்தார். 'ஆஹா!' என்று ஆனந்தபரவசராகி அவர்கள் இருந்தனர்—அடுத்தபடி பேசினார் அமீரே மில்லத், அவருடைய குரலிலே நடுக்கமோ உருக்கமோ இல்லை—சோர்வுமில்லை; சொக்கவைக்கும் சக்தியுமில்லை—ஓர்வகைக் களிப்பு-அதிகாரத்தொனி-தெளிவாக இருந்தது, அவர் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்றார்! எப்படி இருந்திருக்கும் அன்று! மனக்கோட்டைகள் தகர்க்கப்பட்டன. கற்பனை கலைந்தது! கேலியும் கண்டனமும் பயனற்றுப்போய்விட்டன. பாகிஸ்தான் ஏற்பட்டேவிட்டது!

> ஒருக்காலும் பாகிஸ்தான் கிடைக்காது
>
> பாகிஸ்தானுக்குத் தலைவர்கள் ஒருபோதும் இணங்கப் போவதில்லை.
>
> பாகிஸ்தானுக்குச் சாவுமணி அடித்தாகிவிட்டது.

என்றெல்லாம், ஏடுகளில் தீட்டப்படவே, எக்காளமிட்டனர் காங்கிரஸ் அன்பர்கள். காந்தியார் கடவுளின்மீது ஆணையிட்டுக் கூறுகிறார், நேருஜி சர்வதேசியக் கண்கொண்டு பிரச்னையைப் பரிசீலனை செய்து பார்த்து, முடிவாகக் கூறிவிட்டார், இரும்புமனிதர் படேல், வாளை வாள் கொண்டு தாக்குவோம் என்று பிரதாபமும் பேசிவிட்டார், இவ்வளவு வீரஉரைகளை, தலைவர்களின் முழக்கங்களைக்கேட்டதால், காங்கிரஸ் அன்பர்கள், பாகிஸ்தான் ஏற்படவே ஏற்படாது என்று திடமாக நம்பியதிலே ஆச்சரியமில்லை.

தலைவர்களின் முழக்கங்களைக் கேட்டுத் தங்கள் மனதைப்பறிகொடுத்த காங்கிரஸ் நண்பர்கள், திகைக்கும்படி, உண்மை உலவலாயிற்று! பாகிஸ்தான் உருவெடுத்துவிட்டது!

காங்கிரஸ் நண்பர்கள் மட்டுமேதான், மனமயக்கத்தின் காரணமாக நீண்டகாலம் பாகிஸ்தான் பலிக்காது என்று பேசிக்கொண்டிருந்தனரே யொழிய, பாகிஸ்தானை எதிர்த்த தலைவர்களுக்கெல்லாம், நெடுநாட்களுக்கு முன்பே நிச்சயமாகத் தெரியும் பாகிஸ்தான் கிடைத்தே தீரும்—அதைத் தடுக்கமுடியாது என்பது. அவர்கள் வேண்டுமென்றே இந்நாட்டு மக்கள் மனக்கண் முன்பு "இந்தியதேசம்" படத்தை நிறுத்தி வைத்தார்களே யொழிய, அவர்களுக்குப் பூகோளம் நன்றாகத் தெரியும். இந்தியா ஓர் துணைக்கண்டம், இயற்கையே அதனை மூன்று பெரும் பிரிவுகளாக்கி வைத்திருக்கிறது, பரந்துவிரிந்துள்ள இந்திய பூபாகம், பலநாடுகள் கொண்ட தொகுப்பே தவிர, ஒருநாடல்ல, என்பதை அவர்கள் அறிவார்கள்! அவர்கள் பூகோளப்படங்களையும் பாடங்களையும், மக்களுக்குக் காட்டவில்லையே யொழிய, அவர்கள் நன்றாக அறிவார்கள் — பலதலைவர்கள் பலமுறை தமது படிப்பறையில் அமர்ந்து ஒருகரத்தில் இந்தியாவின் படமும் மற்றோர் கரத்திலே ஐரோப்பாவின் படமும் வைத்துக்கொண்டு, ஒப்பிட்டுப்பார்த்திருக்கிறார்கள் — ஏறத்தாழ (ரஷியாவை நீக்கினால்) இந்தியாவும் ஐரோப்பாவும் அளவிலே ஒன்றுதான், ஆனால் ஐரோப்பாவிலே பல நாடுகள் உள்ளன,

அதிலே தவறு என்றோ, ஆபத்து அதனாலேவருகிறது என்றோ கருதிக் கொண்டு, ஐரோப்பா ஒரே நாடு ஆகவேண்டும் என்றுயாரும் கிளர்ச்சி செய்யவில்லை என்பதை உணர்ந்திருக்கிறார்கள்— தாங்கள் உணர்ந்ததை, மக்களுக்கு அந்தத் தலைவர்கள் கூறினதில்லை. படம் தந்த பாடத்தை மக்கட்குக் கூறவில்லை—மறதியால் அல்ல, தாங்கள் உண்மையை மறைக்கிறோம் என்பதை மக்கள் சுலபத்திலே கண்டு பிடிக்க மாட்டார்கள் என்ற தைரியத்தால்! அவர்கள் நன்றாக அறிவார்கள், நமது நாட்டிலே, வீட்டுக்கு வீடு பஞ்சாங்கம் இருக்குமேயொழிய, அட்லாஸ், உலகதேசப் படப்புத்தகம் இல்லை என்பதை! அது போலவே, பாகிஸ்தானை எதிர்த்துக் கொண்டிருந்தபோதே, அந்தத் தலைவர்கள் நன்கு அறிவார்கள், தர்க்கத்தால், அதன் பயனாக வாழ்க்கை முறையிலே பெரும் பகுதி, ஒன்று

பட்டு, கட்டுப்பாட்டுடன் விளங்கும் இஸ்லாமிய இனம், ஒரு இலட்சியத்தைக் கொண்டுவிட்டால், அந்த இலட்சியம் ஈடேறும் வரை ஓய்வின்றிப் பணிபுரியும் என்ற உண்மையை. ஆனால் அந்த உண்மையை மக்களுக்கு அந்தத் தலைவர்கள் எடுத்துக் கூறவில்லை! அதற்கு நேர்மாறான காரியமே செய்தனர்—அதாவது இஸ்லாமியர் சிறு தொகையினர், அவர்களிலே மிகமிகச் சிறுபான்மையோரே, 'ஜின்னா சாயபு'வை ஆதரிக்கிறார்கள் என்று கேலிபேசி, பாகிஸ்தான் வளருவதை மக்கள் காணமுடியாதபடி கருத்துக்குத் திரையிட்டனர்.

அந்தத் தலைவர்கள் தங்கட்குத் தெரிந்த சரித்திரத்தைக்கூட மக்களிடமிருந்து மறைத்தனர். 'இந்தியா'வை ஒரு குடைக்கீழ் கொண்டு வரச் செய்யப்பட்ட முயற்சிகள் பலவும், இயற்கை முறைக்கும், இனப்பண்புக்கும் ஒத்து வராத ஒரே காரணத்தால் முறிந்து போயின என்பதை அவர்கள் நன்கு அறிவர். குப்த, மௌரிய சாம்ராஜ்யங்களின் சரிவு, மொகலாய சாம்ராஜ்ய முறிவு இவைகள் அவர்கட்கு மனப்பாடம்! அஹிம்சை வழியைக் கையாண்ட அசோகனும், 'ஒருகுடைக்கீழ் இந்தியாவை'க் கொண்டுவரும் திட்டத்தை நிறைவேற்றி வைக்க முடியவில்லை என்பதை அவர்கள் ஐயந்திரிபற அறிவார்கள். அறிந்தும், மக்களிடம் கூறவில்லை.

பூகோள அறிவு, சரித அறிவு, மார்க்க அறிவு, மக்களின் மனப்பண்பு பற்றிய அறிவு ஆகிய, இவ்வளவையும், அவர்கள் மறைத்தனர்—மறைத்துவிட்டு, தங்களை நம்பிய மக்கள் மனதிலே கற்பனையைப் புகுத்தி, வீண் ஆசை, விபரீதமான வேகமுள்ள நம்பிக்கை, தாக்குப் பிடிக்க முடியாத தைரியம், அறிவுக்குப் பொருந்தாத அலட்சிய சுபாவம், ஆகியவைகளை உள்ளத்திலே குடி புகவைத்தனர், என்று நாம், அந்தத் தலைவர்கள் மீது குற்றம் சாட்டுகிறோம்.

ஓராண்டாக, படுத்த படுக்கையில் இருந்து, உலக விவகாரத்தை மறந்து இருந்த யாரேனும் ஓர் காங்கிரஸ்காரரைக் கூப்பிட்டு, 'ஐயா விசேஷம் தெரியுமா? பாகிஸ்தான் கிடைத்துவிட்டது" என்றால், அவர் தமது நோயையும் மறந்து, சிரிப்பார்! சிரித்துக்கொண்டே, பாகிஸ்தானாவது கிடைப்பதாவது, வேடிக்கைக்கார மனுஷரய்யா நீர்!" என்று கூறுவார். அவ்வளவு ஆழப் பதிந்திருந்தது, பாகிஸ்தான் கிடைக்காது என்ற எண்ணம். மக்களின் மனதிலே இவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது, மறக்க முடியாத குற்றம்! ஜெர்மன் மக்களுக்கு ஹிட்லர் செய்தகேடும் இத்தகையதே! நாஜீ சத்தை நசுக்கக்கூடிய சக்தி எதிலும் இல்லை, இதை நம்புங்கள்! என்று ஓயாமல், உரத்த குரலிலே நாஜித் தலைவர்கள் பேசிப் பேசி, ஜெர்மன் மக்கள் மனதிலே, அசைக்க முடியாத ஓர் அசட்டுத் தைரியத்தை உண்டாக்கி விட்டனர்! இங்கும் அதேபோலவே காங்கிரஸ் நண்பர்கள் மனதுக்கு மயக்க மருந்து தரப்பட்டது.

ஜனாப் ஜின்னாவுக்குச் செல்வாக்கு இல்லை. லீகிலே பிளவு ஏற்பட்டுவிட்டது. ஜின்னாவை எதிர்க்க ஜாகீர் உசேன் முஸ்தீப்பு.

ஜின்னாவைத் தீர்த்துக்கட்ட அஹ்ரார்கள் முடிவு.

காக்சார்கள் லீகை ஒழிக்க உறுதி கொண்டு விட்டனர்.

சிகந்தர் ஜின்னாவை அறைகூவுகிறார்.

அல்லாபக்ஷிடம் லீக்காவடி.

கான்சாகிப்பிடம் ஜின்னா பாச்சா பலிக்காது.

முஸ்லீம் நாடுகளே பாகிஸ்தானைக் கண்டிக்கின்றன.

இவ்விதமாகவெல்லாம் பேசியும் எழுதியும், அந்தத் தலைவர்கள், பாகிஸ்தான் ஓர் கேலிக்கூத்து, மிக மிகச் சிறியவிஷயம், என்று மக்கள் எண்ணும்படி செய்தனர்—பாகிஸ்தான் கோரிக்கை நியாயமானது தவிர்க்க முடியாதது, ஒரு இனத்தின் இருதய கீதம் என்ற உண்மையை அறிந்தும் மக்களுக்கு உரைக்காமல், அவர்களைத் தவறான வழியில் அழைத்துச் சென்றனர். அழைத்துச் சென்று, நடுவழியிலே விட்டுவிட்டு ஓடிவந்து விட்டார்கள் — அங்கே கேட்கிறது வெற்றிமுழக்கம், பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற முழக்கம்! நோயறியா மருத்துவன் இருப்பது ஆபத்து, அவனிடம் முறை சரியில்லா மருந்தும் மூலிகையின் குணமறியாக் கையாளும் அக்கையாளின் விதியில் அபழுது இருந்தால், எவ்வளவு விபரீதம் ஏற்படும், அந்த மருத்துவனிடம் செல்லும் நோயாளிக்கு! அக்கதி இன்று!!

நோய் இன்னவென அறிந்து, அதற்கான மருந்து வகையும் தெரிந்து, மருந்து செய்யும் முறையும் அறிந்து தக்க மூலிகையைத் தேடி மருந்தாக்கித்தரும் கையாளும் இருந்தும், இவ்வளவு இருந்தும், நோய்க்குறியைப் பற்றி வேண்டுமென்றே தவறானவைகளைக் கூறி, தேவையற்ற மருந்தை முறையற்ற வகையில், பயிற்சியற்ற கையாளைக் கொண்டு தயாரித்துக் கொடுக்கச் செய்தால், அந்த மருத்துவனை என்னவென்று கூறுவது! அதுபோல, பூகோள, சரித்திச் சான்றுகள், மக்கள் மனப்பண்பு நூலறிவு [illegible] இவைகளும், பாகிஸ்தான், மறுக்கமுடியாதது, கிடைத்தே தீரும் என்பதை விளக்கி இருக்க, அதை விளக்கிக் கொண்டு, மக்களைத் தவறான கருத்துலகுக்கு அழைத்துச் சென்ற மாபெரும் பாதகத்தைச் செய்தனர் அந்தத் தலைவர்கள்.

செய்தனர் என்று மட்டும் கூறுவதற்கில்லையே! இன்றும் செய்து கொண்டே வருகின்றனர்.

பாகிஸ்தான் ஒருக்காலும் கிடைக்காது என்று வீரமுழக்கமிட்டனர் —இன்றோ பாகிஸ்தான் ஏற்பட்டு விட்டது.

தங்களை மக்கள் எங்கே கண்டு பிடித்து, "என்னய்யா சர்தாரே! ஆச்சாரியரே! மகாத்மாவே! ராஷ்டிரபதியே! வலங்கைமானே, வல்லத்து அரசே! எல்லைக்குக் காந்தியே! நீங்களெல்லாம், வீரதீரமாகக் கூறினீர்களே, அதெல்லாம் நடக்கிற காரியமா! பாகிஸ்தானாவது மண்ணாவது என்று தைரியம் சொன்னீர்களே, கடைசியில், பாகிஸ்தான் கிடைத்து விட்டதே! உங்கள் பேச்சை நம்பி நாங்கள், எவ்வளவு வீறாப்புடன் வீம்புபேசி வந்தோம், கடைசியில் எங்கள் முகத்திலே கரிபூசிவிட்டீர்களே," என்று எங்கே கேட்டு விடுவார்களோ என்ற அச்சத்தினால், அந்தக் காங்கிரஸ் தலைவர்கள், இப்போது வேறு ஒரு மயக்க மருந்தைத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

"பாகிஸ்தான் கொடுத்து விட்டோம்! என்ன பாகிஸ்தான் அது! பிரமாதம்! அதன் இலட்சணத்தைப் பார்த்தாலே யாருக்கும் பிடிக்காது. பாகிஸ்தானில் வளம் இல்லை, தொழில் இல்லை, பணம் இல்லை, குணம் இல்லை," என்று கூறுகின்றனர்.

பிர்லா, புள்ளி விவரங்களைக் கொட்டிக் காட்டி, பாகிஸ்தானுக்குப் பலம் இல்லை, வளம் இல்லை என்று கூறுகிறார்.

இந்த மயக்க மருந்து, திடீர்த் தாக்குதலுக்கு ஆளான, நம்பி மோசம்போன நண்பர்களின் மனதுக்கு, ஏற்பட்டுள்ள புண்ணினைப் போக்கப் பயன்படும் என்பதுடன், வெளியுலகுக்கு, அழைப்புச் சீட்டுப் போலவும் பயன்படும் என்பதும் பிர்லாவின் கருத்து.

"கவலை வேண்டாம்! பாகிஸ்தான் ஏற்பட்டால் என்ன? அங்கே என்ன இருக்கிறது? நமது சக்திக்கு முன்பு அந்த அரசு எம்மாத்திரம்" என்று கூறுகிறது பிர்லாவின் புள்ளிவிவரம்; களிப்பும் கர்வமும் கலந்து காணப்படுகிறது புள்ளி விவரத்தில்.

இந்துஸ்தானில் பருத்தி மில் 380

பாகிஸ்தானில் 9. என்கிறார் பிர்லா!

களிப்பூட்டுவதற்குக் கூறுகிறார், இதனை.

"கேளுங்கள் இந்துக்காள்! நம்மிடம் சணல் ஆலைகள் 108 உள்ளன. பாகிஸ்தானில்? பூஜ்யம்!" என்று கூறிப் பூரிக்கிறார்.

"156 சர்க்கரை மில்கள் இந்துஸ்தானில்! பத்துத்தான் பாகிஸ்தானில்" என்று கூறுகிறார், புள்ளி விவரத்தை இனிப்பு மாத்திரையாக்குகிறார். இரும்புக் கம்பெனி நம்மிடம் 8. பாகிஸ்தானில் ஒன்றுகூட இல்லை, சிமிட்டிக் கம்பெனி நம்மிடம் 16, அங்கே 3! காகித மில் நம்மிடம் 16—அங்கே பூஜ்யம். கண்ணாடி தொழிற்சாலை நம்மிடம் 77; அங்கே ஒன்றுகூட இல்லை"—என்று கூறி மகிழ்கிறார் பிர்லா!

இந்தப் புள்ளி விவரப் பட்டியைக் காட்டி இந்துக்களைப் பூரிக்கவைத்து, நம்பிக்கை யூட்டுகிறார் பிர்லா. அவருடைய எண்ணப்படி, இந்துஸ்தான் பகுதியினர், பாகிஸ்தான் பலனற்றது, பசையற்றது என்று கூறிக் கேலி பேசி, இப்படிப்பட்ட பாகிஸ்தான்தானே ஏற்பட்டுவிட்டது, இதனால் என்ன! என்று கூறிக் களிப்படையக்கூடும். ஆனால் அதேபோது, முஸ்லீம்கள் மனதிலே இந்தப் புள்ளி விவரம் என்ன வகையான எண்ணத்தை எழச் செய்து இருக்கும்.

"அங்கே 380 பருத்தி மில்கள்! 380! [illegible] போராடிப் பெற்றஇடத்திலே 9! பொருளாதார நிலையிலே எவ்வளவு கேவலமான முறையிலே நாம் இதுவரை, ஒரே நாட்டு மக்கள் என்று இருந்துவந்ததால், நடத்தப்பட்டு வந்தோம். எவ்வளவு ஓர வஞ்சனை! வளமெல்லாம் இந்துக்கள் இருக்கும் இடத்திலே செய்துகொண்டார்கள்! தொழிலெல்லாம், தங்கள் பகுதியிலே ஏற்படுத்திக் கொண்டார்கள். நாம்பெருவாரியாக வாழும் இடங்களில், வளம், தொழில் எதையும் அபிவிருத்தி செய்யாமல், நம்மைப் பஞ்சைகளாய், உழைப்பாளிகளாயல்லவா வைத்துள்ளனர். அங்கேவளம், தொழில், ஆகவே செல்வம், சுகம்! இங்கே? உழைப்பு! பலன்? உருக்குலைந்தோம்! இந்த நமது உண்மை நிலையை உணர்ந்ததால்தான், நமது தலைவர் ஜனாப் ஜின்னா, நமது உரிமையை நிலை நாட்டித் தனி அரசு அமைத்துக்கொண்டால், நமது வளத்தை விருத்தி செய்து, தொழிலைப் பெருக்கி, இன்பவாழ்வு பெறும்படிச் செய்யமுடியும்—என்று கூறினார்—போராடினார்—பாகிஸ்தானும் அமைக்கிறார், என்று கூறிப் பூரிப்பர்—புதியதோர் சக்தியும் பெறுவர். பிர்லாவின் புள்ளி விவரம் சரியா, தவறா என்பது வேறு விஷயம். இயற்கைச் செல்வம் எங்கு அதிகம் என்பதும் வேறு விஷயம். ஆனால் அதை வெளியிட்ட நோக்கமே முக்கியமான விஷயம். பாகிஸ்தான் பொருளாதார பலமற்றது என்று பழி கூறுவதே நோக்கம். காங்கிரஸ் நண்பர்களை, அவர்களின் தலைவர்கள் மீண்டும் தவறான பாதைக்கு அழைக்கிறார்கள்.

இந்தியா ஒரே நாடாக, ஒரே சர்க்காரின் கீழ், இருந்துவந்த காலத்திலே எத்தகைய சித்திரம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பிர்லாவின் புள்ளி விவரம் காட்டுகிறது—இந்துஸ்தானில் வளம், தொழில், செல்வம், சுகம்—பாகிஸ்தான் பகுதியில் வறட்சி, உழைப்பு, வறுமை, வாட்டம். கேலிக்காக என்று கருதிக் கொண்டு இதை வெளியிட்டன நமது நாட்டு தேசியத் தாள்கள். நமக்கு ஆங்கிலப் பேராசிரியர் ஷேக்ஸ்பியர் கூறிய வாசகமே நினைவிற்கு வந்தது.

"Look at this picture and at that"

இந்தப் படத்தையும் பார், அந்தப் படத்தையும் பார்!

வளமும் செல்வமும் அங்கே!
வறட்சியும் வறுமையும் இங்கே!

இதைத்தான் சித்ரமாக்கித் தருகிறார் பிர்லா!

அவரும் அவரைச் சார்ந்தோரும், இப்படிப்பட்ட பாகிஸ்தானை வைத்துக் கொண்டு நீ எப்படி வாழப்போகிறாய் என்றுபாகிஸ்தானிகளைக்கேட்கிறார்கள். அவர்களின் பார்வை பேசுவது என்ன? இவ்வளவுகாலம் உங்களை நம்பி, ஒரேநாடாக, ஒன்றாகவாழ்ந்து வந்தோமே, எங்கள்பகுதியிலே வறட்சியும் வறுமையுந் தானே காண்கிறோம்—உங்கள் பகுதியிலே செழுமை, எங்கள் பகுதியிலே வறுமை! இதுதானே நாங்கள் உங்களோடு இருந்து கண்டபலன்? என்று கேட்பர்—சோகத்துடனும் கோபத்துடனும். இந்தப் புள்ளி விவரமும் அதிலே தொக்கியுள்ள கேலியும், மௌலானா அபுல்கலாம் அசாதையும், லீகுக்கு இழுத்துச் செல்லத் தூண்டுமே! இந்துஸ்தான் பணஸ்தான்—பாகிஸ்தான், பாப்பர்ஸ்தான்!"—இதுதான் பிர்லாவின் புள்ளி விவரத்தின் சுருக்கம்! ஆம்! ஒன்றாகக் குடித்தனம் நடத்தினோம், அதன் விளைவுநாங்கள் இருக்குமிடம் பாப்பர்ஸ்தானானது தான்! இதை அறிந்தேதான், எமது தலைவர் தனிநாடாக வேண்டுமென்றார், அவரைத் தலைவராகப் பெறும் பாக்கியம் எமக்குக் கிடைத்தது, அந்தப் பாக்கியஸ்தானும் பெற்றுவிட்டோம், என்று கூறிப் பூரித்து, புது உறுதியுடன், தங்கள் நாட்டை வளமாக்கும் பணியிலேதான் ஈடுபடுவர்.

●

## திராவிடர் மாநாடு

திராவிடர் மாநாடு, முன்னாள் அமைச்சர் தோழர் முத்தய்யமுதலியார் C. I. E. அவர்கள் தலைமையில், திருச்சியில், 15-ந்தேதி நடைபெற்றது.

திராவிடர் மாநாட்டில், திராவிடர்கழகக்கொடியை, கும்பகோணம் பிரபலவககீலும், குடந்தை திராவிடர்கழகப் பிரமுகருமான, தோழர் முக்துதனபாலர் ஏற்றிவைத்தார்.

டாக்டர் A. கிருஷ்ணசாமி, திறப்புவிழா வாற்றினார்.

திராவிடர்மாநாட்டுக்கு விஜயம் செய்தவர்களை, திராவிடர்கழகநிர்வாகத் தலைவர், தோழர் T. P. வேதாசலம் வரவேற்றார். திராவிடர்கழகத் தலைவர் பெரியார், திராவிடர்மாநாட்டில் விளக்கஉரையாற்றினார்.

## திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி

1 நிதி வசூலித்தவர்களுக்கு நன்றி. வசூலிக்காதவர்கள், வசூல் வேலையில் இறங்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

2 வசூலான தொகை ரூ. 45890.

3 வசூலான தொகையில், பிரசாரத்துக்காக, பெரியார், மோட்டார் வான் வாங்கியதால் ஏற்பட்ட செலவு ரூ. 9280.

4 வாங்கிய மோட்டாருக்கு மாதா மாதம் ஏற்படக்கூடிய செலவுக்காக 200ரூபாயும்,பிரசாரசெலவு 300 ரூபாயும் நிதிப்பணத்தில் எடுக்கப்படும்.

5 ஜூலை முதல்தேதி திராவிடநாடு பிரிவினை தினமாகக் கொண்டாடத் தீர்மானம்.

6 திராவிடர் கழக நிர்வாகிகள், மேடைப் பிரசங்கிகள், கருப்புடை அணியவேண்டும்.

7 பொதுவாகவே மற்றவர்களும் அணியக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8 பிஅண்டுசி மில் தொழிற்சங்கத்தைச் சட்ட விரோதமாக்கியதற்கு சர்க்காரைக் கண்டித்தும், தொழிலாளரை ஆதரித்தும் தீர்மானம்.

## ஆறுதல்

இந்தியாவினின்றும், திராவிட நாடு தனி நாடாகப் பிரிந்தாகவேண்டும், என்று டாக்டர் A. கிருஷ்ணசாமி, வீர உரை ஆற்றினர் திருச்சி திராவிடமாநாட்டில். திருச்சிமாணவர்கள், காங்கிரஸ் பற்றுள்ளவர்கள்,"இதுமுடிகிறகாரியமாப்பா! சுலபசாத்யமா? டாக்டர் கிருஷ்ணசாமியாலே அவருடைய நெற்றியிலுள்ள குறியையே,இங்கிலாந்துப்படிப்புக்குப்பிறகும், கலைக்கமுடியவில்லையே!! பயப்படுகிறார்! இவரா, நாட்டைப் பிரிக்கப் போகிறவோர். அதெல்லாம்நடக்காது,வா!சும்மா,அழகான ஆங்கிலத்தை அவசரமாகப் பேசுகிறார், அவ்வளவேதான்!" என்று பேசிவிட்டுப் போனது கேட்டு, திருச்சிதிராவிட மாணவர்கள் வருந்தினர் என்று கேள்வி. "என்ன செய்யலாம் நண்பர்களே! நமது காலம் இப்படி எல்லாம் கூட ஆகிவிட்டது." என்று கூறி அவர்கட்கு ஆறுதல் அளிக்கிறோம்.

அவர்கட்கு என்றால் திராவிட மாணவர்கட்கு.

## தந்தையும் மகனும்

இந்துஸ்தானுடனோ. பாகிஸ்தானுடனோ சேராமல் திருவாங்கூர் தனிச்சுதந்தர நாடாகி விடப்போவதாக, திவான்: சர். சி. பி. ராமசாமி ஐயர் அறிக்கை வெளியிட்டதை திருச்சி திராவிடர் மாநாட்டில் டாக்டர் கிருஷ்ணசாமி பாராட்டி வரவேற்றார். டாக்டரின் தந்தையோ, மைசூர், இந்துஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் சேரும் என்று அறிவித்திருக்கிறார்—மைசூர் சுதந்திர நாடாகும் என்று அறிக்கை வெளியிடவில்லை.

## சிலோன்

சிலோனுக்குக் குடிஏற்ற நாட்டுஅந்தஸ்த்துத் தருவதென பிரிட்டிஷ்சர்க்கார் முடிவு கூறிவிட்டனர்.

## நேரடி நடவடிக்கை

திருச்சி திராவிடர் மாநாட்டில்தலைமை வகித்த முன்னாள் அமைச்சர், தோழர் S. முத்தையமுதலியார், C. I. E. திராவிடநாட்டுப் பிரிவினைக்காகத் தீவிரமான நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உணர்ச்சியுடன் பேசினார். திராவிடர்கள் நேரடிநடவடிக்கையில் ஈடுபடச் செய்ய எண்ணும் தலைவர், உடனடி நடவடிக்கையாக, C. I. E. பட்டத்தை உதறித்தள்ளிவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்—திராவிடர் சார்பிலே தான்! உதறுவதும் சீக்கிரமாக நடக்க வேண்டும். இல்லையானால் பட்டம் கொடுத்த ஆட்களே, கண்ணில் தென்படமாட்டார்கள், அதாவது வெள்ளையர்வெளியேறுமுன்பு! செய்வாரா? கேள்வி அல்ல. திராவிடனின் பெருமூச்சு!

## நாகர்கோவில் நகரசபைத் தலைவர்.

நாகர்கோவில் நகரசபைத் தலைவராகத் தோழர் P. சிதம்பரம் B. A. B. L., தேர்ந்தெடுக்கப் பெற்றிருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். அவர் பிரபல வழக்கறிஞர்; சிறந்த எழுத்தாளர்; தேர்ந்த ஆராய்ச்சியாளர்; காலத்திற் கேற்ற முற்போக்குக் கொள்கை உடையவர்.

## விற்பனைவரி

விற்பனைவரி விகிதத்தை அதிகப்படுத்துவதென்று சென்னை சர்க்கார் முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது.

## முற்றிய தேசியம்

எல்லைப்புறக் காந்தி கான் அப்துல் கபார்கான், அங்குள்ள பட்டாணியர்களுக்கு விடுத்த வேண்டுகோளில் "வெளியார்" எனும் சொல்லை உபயோகித்தார். பத்திரிகை நிருபர், யார் 'வெளியார்' எனக் கேட்டார்.

"பட்டாணியரைத் தவிர்த்தமற்றவர்கள்—எல்லைப்புறத்தில் பிறந்த அனைவரும் பட்டாணியர்கள்— பஞ்சாபிகள், ஹிந்துஸ்தானிகள், மற்ற சகலரும் வெளியார்கள்தான்" என்க் கபார்கான் பதில் கூறினர். முற்றிய தேசியம்!

## தாராவி தென்னிந்திய தமிழர் சங்கம், பம்பாய்.

பம்பாய்—தாராவி இல்லத்தார் சமாஜக் கட்டிடத்தில், பம்பாய்—தாராவியில் வசிக்கும் தமிழர் சமூகங்களின் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்று நடைபெற்றது. திருச்சினாப்பள்ளி, திருக்குறள். வீ. முனிசாமி பிள்ளை, பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை வகித்தார்கள். இங்கு வசிக்கும் எல்லா சமூகங்களின் தலைவர்களும், பிரதிநிதிகளும் ஒன்றுசேர்ந்து முதல் முதலாக ஒரு பொதுச்சங்கம் நிறுவவேண்டிய அவசியத்தைப்பற்றி வாதித்து, தமிழ் மக்களின் கல்வி, சுகாதாரம் முதலியவற்றிற்கு எல்லா சமூகங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

## 'அழகு'

தமிழர் விடுதலை கருதிப் புரட்சிக் கருத்துக்களோடு ஜூலை முதல் தேதியிலிருந்து திங்கள் இதழாக வெளிவருகிறது.

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

தனிப்பிரதி அணா நான்கு ஆண்டுக் கட்டணம் ரூ. மூன்று.

விவரங்கட்கு:—

'அழகு' அலுவலகம்
289, தம்புச் செட்டித் தெரு,
சென்னை. 1

*1-ம் பக்கத் தொடர்ச்சி*

மாகக் கொடுத்திருக்கிறது. ஆளுவோரு க்குப்படைக்குப் பயிற்சியளிக்க, தேர்ந்த அமெரிக்க இராணுவ ஆசிரியர்களும் அங்கு குடியேறி இருக்கின்றனர். சமாதான காலத்திற்கேற்ப நாட்டைசீர்படுத்தவாம் இந்த நடவடிக்கை. உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாமல் அமெரிக்கா நடுநிலைமை வகிக்கும்லட்சணம் இது.

அண்டையிலே உள்ள சிறுநாடான அல்பேனியாவில், கிரீஸ் தன்கைவரிசையைக்காட்டுகிறது. அல்பேனியா அலறுகிறது. கேட்பாரில்லையா? இதனை கேட்கநாதியைக் காணோம். செவிடாக இருக்கிறது இதற்கு அமெரிக்கா. அமைதியைக் காக்கும் நோக்கோ?

யூகோஸ்லோவியாவிலே புதிய போக்கு. சீமான்களின் ஆட்சி அங்கு இல்லை. பல்கேரியா, ருமேனியா, போலந்து முதலிய நாடுகளிலே சமதர்ம மொட்டுத்தோன்றி இருக்கிறது. மலர்ந்து மணம்வீசச்சிலகாலம் பிடிக்கும். மொட்டு கருகிவிடாமல் காக்கவேண்டும். பலமான வேலி முக்கியம்.

ஹங்கேரியிலே மாறுதல் சிலநாளைக்கு முன்நிகழ்ந்தது. பிரதமர் வேற்று நாட்டிலிருந்தே, பதவியை இழக்கத் துணிந்துவிட்டார். அமெரிக்காவின் ஆதரவு அவர் பக்கத்தில். பிரதமரின் சமுதாயப் பண்பு இதிலிருந்தே தீர்மானித்துவிடலாம். ஹங்கேரிக்கு மூன்று கோடிகடன் கொடுப்பதாக அமெரிக்கவாக்குறுதி. பிரதமர் வீழ்ச்சியால், அந்தக்கடனை அமெரிக்கா கொடுக்கமுடியாதென அறிவித்துவிட்டது. தனது கட்டளையை நிறைவேற்றக் கருத்துடையாருக்கே, அமெரிக்கா கடன் கொடுக்கச் சம்மதிக்கிறது. கொடுக்கப்படும் கடனும் போர்க்கருவி ரூபத்தில். ஏனோ இந்த இராணுவ அணிவகுப்பு?

துருக்கியின் போக்குத் தெளிவாகிவிட்டது. அமெரிக்காவின் யுத்ததளவாடம் கிரீசுக்குக் கிடைத்தது போலவே துருக்கிக்கும் கிடைத்திருக்கிறது. இதத்குள்ளாகக் கொஞ்சம் அதட்டிப்பேசத் துணிவும் பெற்றிருக்கிறது. அமெரிக்கத்தலைவர் ட்ரூமென் தொனியில், துருக்கி பேசப் பயிற்சி பெறுகிறது.

சிரியா, லெபனன் முதலிய நாடுகள் மீதிருந்த பிரெஞ்சு ஆதிக்கம் போய்விட்டது. அங்கும் அமெரிக்காவின் செல்வாக்கு ஏற்பட்டு வருகிறது. 'பெர்ஷியாவிலோ புதிய எண்ணெய்க் கிணறுகள் அமெரிக்காவிற்குக்குத்தகையாகக்கிடைத்திருக்கின்றன. பிரிட்டன் வசம் இருந்து வந்த எண்ணெய் விஷயத்திலும் அமெரிக்காவிற்குப் பங்கு கிடைத்திருக்கிறது. இவைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் அதனுடையதே.

அமெரிக்காவில் கிடைக்கும் எண்ணெய் உள்நாட்டு உபயோகத்திற்கு மட்டுந்தான் போதியதாக இருக்கும். அதன் பலனாக உலக எண்ணெய் உற்பத்தியில் தனக்கு அதிகாரம் இல்லாமல் போய்விடும். மத்திய கிழக்குப் பிரதேசத்தில் எண்ணெய் விஷயத்தில் அமெரிக்காவிற்குக் கிடைத்துள்ள ஆதிக்கம், அந்தப் பயத்தைப் போக்கிவிட்டது.

அரேபியாவிலிருந்து பெர்ஷிய வளைகுடா வரையில் போரின்போது ஆகாய விமான தளங்களை அமெரிக்கா கட்டியிருந்தது. அவைகள் இன்னும் அழிக்கப் படவில்லை. அங்கு, அமெரிக்கா முகாம் போட்டுத்தான் இருக்கிறது.

வட ஆப்ரிக்காவிலுள்ள எரிடீரியாவில் அஸ்மாரா என்ற இடத்தில் பெரியதோர் படைதளம் அமைத்திருந்தது அமெரிக்கா. அதுவும் அப்படியேதான் இருக்கிறது. எகிப்து அரசரோடு உறவுகொண்டாட முயலுகிறார் அமெரிக்கத் தலைவர். இத்தாலிக்குச் சொந்தமான வட ஆப்ரிக்க பிரதேசங்களை மேல்பார்க்கும்பொறுப்பை ஏற்கனவே அமெரிக்கா கேட்டிருக்கிறது. அதனை மறுக்கப் பிரிட்டனால்முடியாது.

மத்திய தரைக் கடலில் அமெரிக்கப் போர் கப்பல்கள் காட்சி அளிக்கின்றன. பிரிட்டிஷார் காலி செய்த இடங்களை எல்லாம், அமெரிக்கா கைப்பற்றி ஆகிவிட்டதென்றே கூறலாம். ஐரோப்பாவில் உள்ள சிறு சிறு நாடுகளில் எல்லாம் சர்வாதிகார ஆதிக்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப் போவதாக ட்ரூமன் சொல்லிவிட்டார். 'தொழில் வளத்தை அதிகமாக்க உதவி செய்கிறோம்' எனும் பேச்சில் போர்க்கருவிகள் அங்கு குவிக்கப்படுகின்றன. ஹிட்லர் போக்கிலும் பயங்கரமானதாக இருக்கிறது.

சைனாவோ, அமெரிக்காவின் கரத்தில் சிக்கி ஆண்டு பல ஆய்விட்டது. ஜப்பானிலும் அமெரிக்காவின் ஆதிக்கந்தான். பிலிப்பைன் தீவோ படிதாண்டாப் பத்தினி. ஜாவா தீவிலோ, அமெரிக்கத் தொழில் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஹிந்துஸ்த்தான் அன்பெல்லாம் அமெரிக்காவினிடத்தில்தான். இந்திய விடுதலையில், அமெரிக்கா காட்டின ஆர்வம் எல்லையற்றது. சந்து விட்டதும் வந்துவிடும். பிரிட்டிஷ் 'ஏகாதிபத்திய'த்தினிடம் ஏற்பட்ட ஆத்திரம் அடங்க அதிக காலம் ஆகும். இதனை உபயோகப் படுத்திக்கொள்ள அமெரிக்கா பின்னடையப் போவதில்லை.

கடந்த போருக்கு முன்வரையில் அமெரிக்கா, ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்க்கும் போக்கையே பின்பற்றி வந்தது. அதனாலேயே முன்னாள் ஏற்படுத்திய சர்வதேசச் சங்கத்தில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் இன்றோ ஏற்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சங்கம், அதன் சிருஷ்டியே. அமெரிக்காவின் ஆதிக்க வேட்டைக்கு அது ஒரு கருவியாக இருக்கிறது. அதில் சேர்ந்துள்ள சிறிய நாடுகளுக்கு ஏதாவது பலன் ஏற்படுமென்று நம்ப இடமில்லை.

அணுகுண்டைஏற்பாட்டோடுவிஞ்ஞானம் முடிந்துவிட்டதாக அமெரிக்கா கருதிக் கொண்டிருக்கிறது. அதன் உதவியால் **'ஒரே உலகம்'** ஏற்படுத்தலாம் என அது நம்பி இருக்கிறது. ஆனால் அந்த ஒரே உலகம் தோன்றுவதற்கு, இன்னும் எவ்வளவு பேர் பலியாக வேண்டி வருமோ? எத்தனை ஹிரோஷிமாக்கள் தரைமட்டம் ஆகவேண்டி இருக்குமோ?

பழைய ஏகாதிபத்திய முறையிலே இன்று அமெரிக்கா இருக்கவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும் அடிப்படையான பண பலம் அசைக்கமுடியாத நிலையில் அமைந்தே இருக்கிறது. அரசியல் சுதந்திரத்தை அபகரித்துக்கொண்டு ஆட்டிவைக்கும் அமைப்பு முறை இல்லை. ஆனால் கடன்கொடுத்துச்சிண்டைப்பிடித்திழுத்துப் பணிபவைக்கும் பண்பு அதில் நிறைந்திருக்கிறது.

எல்லாவகைகளிலும் அமெரிக்காவிற்குச் சாதகமாக, அதன் வியாபாரம் ஆண்டு ஒன்றுக்கு 1200 கோடி டாலர் வீதம் கடந்த இரண்டு மாதமாக வளர்ந்து வருகிறது. போருக்கு முன்பு அதன் ஏற்றுமதி வியாபாரம் 300 கோடி டாலராகத்தான் இருந்தது. பிற நாடுகள்மீது அமெரிக்கா காட்டும் பரிவின் பலன் இது. அமெரிக்காவின் ஆதிக்க வேட்டை மற்றோர் உலக யுத்தத்தில்தான் போய் முடியும். முதலாளித்துவ முறையின் முடிந்த கொள்கை போர்தான்.

"அமெரிக்கா தனித்து இருப்பதைக் கைவிட்டு விட்டது. இதனால்தான், இதனை கம்யூனிஸ்டுகளும், ரஷ்யர்களும் விரும்பவில்லை. நாம் ஆசியாவையும் அமெரிக்காவையும் விட்டு வெளியேற வேண்டுமென மாஸ்கோ நினைக்கிறது. நாம் இல்லாமற்போனால் ஐரோப்பாவும், ஆசியாவிற் சில பகுதிகளும் ரஷ்யாவின் அணைப்பில் சிக்கிவிடும்."

மேல் குறித்துள்ளதுதான் அமெரிக்கத் தலைவர் **ட்ரூமேன் சித்தாந்தம்** எனப் பெயர் பெற்ற முதலாளித்துவ பேனா வீரர்அமெரிக்க **லூயிபிஷர்** எழுதுகிறார்.

★

## பி அண்டு சி

100 நாட்கள் வீரப் போராட்டத்துக்குப்பிறகு, பக்கிங்காம் கர்னாடிக் மில் தொழிலாளர்கள் (19-6-47) வேலைக்குத் திரும்பினர், சமரச ஏற்பாட்டின் பேரில். சமரச ஏற்பாட்டின்விளக்கம், விரிவான முறையில் அடுத்த இதழில்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

யாடப்பட்ட மிருகம், போலீசாரால் விரட்டப்படும் அனாதை.

வரலாற்றை ஜோலா ஊற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான். பலவாண்டுகளாக அமைதியை அறியாத அவள், தன் துயரை மற்றொருவரிடம் கூறுவதில் சிறிது அமைதியடைந்தாள். இருவரும் நேரம் போவதையே கவனிக்கவில்லை. அவர்கள்தான் அந்தக் கடையில் கடைசி. சொந்தக்காரன் கடைசியாக ஒவ்வொரு விளக்காக அணைக்க ஆரம்பித்தான். அப்பொழுதுதான் எழுந்து போகவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகியது.

மூவரும் வெளிக் கிளம்பினர். ஜோலா அவளுடைய அறைக்கு போகவேண்டுமென்று பிடிவாதம் செய்தான். நகரில் மிக மோசமான துர்நாற்றம் வீசுகிற குறுகிய தெருவையடைந்தனர். புழுதியடைந்த வீட்டு வாயற்படிகளில் பெண்கள் "ஏதாவது அதிர்ஷ்டம் வராதா?" என்ற நம்பிக்கையுடன் நின்றுகொண்டிருந்தனர். ஜோலா போகும்பொழுது அவர்களது ஆச்சரியக் குரலும், ஏளனச் சிரிப்பும், பொறுமைப் பேச்சும் அவனுடன் வரும் மங்கையின்மீது வீசப்படுவதைக் கேட்டான்.

தன்னுடைய வருகை தூய்மையானது என்பதைக் காட்டத் தன் நண்பனைத் தொடரும்படி கையசைத்துவிட்டு, ஜோலா அப்பெண்ணின் அறைக்குள் நுழைந்தான். மங்கிய விளக்கொளியில் அலங்கோலமான அந்த அறையில் அவன் கடிதக் கட்டுகளையும், புகைப் படங்களையும் புரட்டினான். கடைசியாகப் புகைப்படமொன்று கிடைத்தது. "நானு" ஆம் அவளுடைய பெயர். குழந்தையின் சட்டையொன்றை அவன் கையிலெடுத்தான். அம்மங்கை கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்தாள். அவளுடைய குழந்தை, அது இறந்துவிட்டது.

ஜோலாவுக்கு உலக வரலாறே கண்முன் வந்து நிற்பதுபோலக் காணப்பட்டது. ஆவேசத்துடன் தன் நண்பனை அழைத்து, அவன் கையிலிருந்த அப்பெண்ணின் சித்திரத்தில் "நானு" என்ற பெயரைத் தீட்டினான். அந்தப் பெயரில் ஒரு பெருங்கதை பிறந்தது, உலகையே உலுக்க.

* * *

அந்தப் புத்தகம் பாரிஸ் நகரையே குலுக்கியது. முதியோர்கள் திகைத்தனர், இளைஞர்கள் துடிதுடித்தனர். அது நாட்டில் நிலவிய கொடுமையை விளக்கிக் காட்டியது. நாட்டின் நலிந்த நிலை ஏட்டிலே இடம் பெறவிடுவது உயர்ந்த தன்மையல்லவென்று கலைப்பூங்காவின் காவலர்கள் சினந்தனர். ஆனால் காடு முரடான வாழ்வினர், இவை இதற்கு முன் ஏன் ஏட்டில் வரவில்லை எனக் கேட்டனர். புத்தகக் கடைகளிலெல்லாம் புத்தகங்கள் கண்ணுக்குத் தெரியும்படி வைக்கப்பட்டிருந்தன. சமூகத்தில் 'மதிப்பிற்குரிய' வகுப்பினர் திடீரென்று புத்தகக் கடையில் நுழைந்து பலப் பல புத்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்ப்பார்கள். கடைசியில் ஏதோ பேச்சு வாக்கில் கேட்பதுபோல "நானு" இருந்தால் ஒரு புத்தகம் தா எனச் சுற்றும் பார்த்துவிட்டு மெதுவான குரலில் கேட்டு வாங்கிச் சென்றனர்.

"நானு"வைப் பற்றிப் பாரிஸ் முழுவதும் பேசிக்கொண்டிருந்ததேயன்றி உண்மையான "நானு"வுக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவள் வழக்கம்போல் 'வாழ்வை' நடத்தி வந்தாள். ஒருநாள் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. நானு சென்று கதவைத் திறந்தாள். ஒருவரையும் காணோம். கதவுப் பிடியில் மூட்டையொன்று தொங்கியது. அதை அவிழ்த்ததில் "நானு" என்ற புத்தகம், பூங்கொத்து, தின்பண்டங்கள், பணம்........முதலியன இருந்தன.

* * *

அப்படிப்பட்ட ஜோலா, பிரான்சு நாட்டிலே, இலக்கிய மன்றத்தாரால் ஏளனம் செய்யப்பட்டு, புத்தகம் வெளியிடுவோரால் புறக்கணிக்கப்பட்டு, மேட்டுக்குடியினரால் வெறுக்கப்பட்டு, தன் பாட்டு மொழியினால் நாட்டுக்குக் கேடு வருகிறதென்று பலர் பழித்துரைக்கக் கேட்டு, பாரிசில், பலகஷ்டங்களைப்பட்டுக்கொண்டிருந்தார். போராடிப் போராடியே, உலகின் பார்வையைத் தன் பக்கம் திருப்பினார். ஆகவேதான், எமிலி ஜோலாவால், "நானு"வுக்காக அனுதாபத்துடன் போராடியவரால், டிரைபசுக்காகப் போராடமுடிந்தது. மற்றவர்கள், "மேதை" என்ற புகழ் பெற மேட்டுக் குடியினரின் பாத சேவை செய்தனர்; அரண்மனைக்கு ஆலாத்தி எடுத்தனர்; ஆலயப் பூஜாரிக்கு அன்பாபிஷேகம் செய்தனர், ஜோலா, மக்களுக்காக, ஒதுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, கொடுமைப் படுத்தப்பட்ட மக்களுக்காக எழுதினார்! எழுதினார் என்றால், போராடினார் என்றே பொருள், அவருடைய எழுத்து, வீரன் கைவாளைவிட வலிவுடையது; உள்ளத்தை உலுக்கக் கூடியது, உலகே எதிர்த்தாலும் அஞ்சாது போரிடும் எழுத்துகள், மமதைக் கோட்டைகளைத் தூளாக்கும் வெடிகுண்டுகள். "நீதி" வேண்டும், என்று, ஜோலாவின் பேனா எழுதிற்று. என்ன நேரிட்டது? "நீதி" கிடைத்தது! மந்திரி சபைகளை, அவருடைய பேனா முனை மாற்றி அமைத்தது, பல மண்டலங்களிலே, மறக்கப்பட்டுப் போன டிரைபசுக்கு, நண்பர்களைத் திரட்டிற்று. ஒரு பெரும் படை திரட்டிவிட்டார், பேனா மூலம். எங்கோ தீவிலே, ஏக்கத்துடன், "நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே" என்று கதறிக்கொண்டிருந்த டிரைபசுக்கு, வெற்றி, விடுதலை, பதினொரு ஆண்டுகள் பராரியாகப் பாழும் தீவில் வதைபட்டவனுக்கு, வெற்றி, விடுதலை; ஒரு ஜோலாவின், எழுத்தால்!!

* * *

பிரெஞ்சு-ஜெர்மன் சண்டை மும்முரமாக நடந்து கொண்டிருந்த சமயம், பிரெஞ்சு ஒற்றனொருவன் ஜெர்மன் படைத்தலைவரின் அலுவலகத்தில் வேலை பார்த்து கொண்டிருந்த பொழுது, சிறிய குறிப்பொன்று அவன் கையில் சிக்கியது. அதை அவன் உடனே பிரெஞ்சு படைத் தலைமை இடத்திற்கு அனுப்பினான். அந்தக்குறிப்பில் பிரெஞ்சுநாட்டுக்கு உயிர்போன்ற படையமைப்பு இரகசியங்கள் எழுதப்பட்டிருந்தன. அந்த இரகசியங்கள் படைத்தலைமைக்குழுவினருக்குமட்டுமே தெரிந்திருக்க முடியும். யார் அந்தத்துரோகி? படைத்தலைவர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்தனர். கடைசியாக ஆல்பிரட் டிரைபஸ் என்பவர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. உண்மையில் அந்தத்துரோகத்தைச் செய்தவன் எஸ்டர்ஹேஸி என்பவன். படைத்தலைமைக்குழுவில் செல்வாக்குப் பெற்றிருந்த எஸ்டர்ஹேஸியின் நண்பர்கள், அவசரமாக டிரைபஸ்மீது வழக்குத் தொடுத்தனர்.

1895 ஆண்டு டிரைபஸ் இராணுவ மன்றத்தால் குற்றஞ்சுமத்தப்பட்டு, அந்தமான்போன்ற டெவில்ஸ்தீவுக்கு

அனுப்பப்பட்டான். தண்டிக்கப்பட்டஉடனேயே அவன் வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டான். பெரிய மைதானத்தில் அவனுடைய படைவாளும், இராணுவச்சின்னங்களும் பிடுங்கப்பட்டன. கூடியிருந்த மக்களும் 'ஒழிக டிரைபஸ்' என முழங்கினர். கடல் முழக்கத்தில், பறவை கூவுவது போல், டிரைபஸ் "நான் குற்றமற்றவன்! பிரெஞ்சு வாழ்க!" எனக்கதறினன். டிரைபஸ் அங்கு ஒருபக்கத்திலிருந்த பத்திரிகைக்காரர்களைப் பார்த்து "நீங்களாவது எனது தூய்மையை உலகுக்குக் காட்டுங்கள்" எனக்கூறினன். பத்திரிகைக்காரர்களுக்குஉண்மையை எழுதச்சொல்ல இவன் யார்? அவர்கள் திரும்பினர்கள் "துரோகி டிரைபஸின்முடிவு" என்று கொட்டை எழுத்துக்களைத் தீட்ட.

அங்கு வந்திருந்தவர்களில் ஒருவர் காதில் அந்தச்சொற்கள் விழுந்தன. "குற்றமற்றவனாயின், உலகவரலாற்றிலேயே மிகக்கொடுமையாகத் தண்டிக்கப்பட்டவன் அவன்தான்" என்று அவர் முணு முணுத்தார். அவர்தான் பிரெஞ்சு நாட்டு பெரும் இலக்கிய ஆசிரியர் அனதேல் பிரான்சு,

மற்றொருவர் அங்கே வரவில்லை. ஆனல் அவர் காதிலும் டிரைபஸின் கூக்குரல் விழுந்தது. எழுதுகோலை வைத்துவிட்டு, கைகளைப்பிசைந்துகொண்டே அங்குமிங்கும் அறையில் அவர் உலவினர், வெறித்தபார்வையுடன் 'அநீதிக்கு இடமளிக்க முடியாது' என்று கூறினர். அவர்தான் ஜோலா.

* * *

டிரைபசின் நண்பர்கள், ஜோலாவிடம், சிலகுறிப்புகள்கொடுத்தனர், அவனுடைய தூய்மைச்கான ஆதாரங்கள். அவைகளைத்துணைக்கொண்டு வேலை செய்ய வேண்டும், டிரைபசை மீட்கவேண்டும், நீதியை நிலைநாட்ட வேண்டும். "முடியுமா?" செ! என்ன கேள்வி அது? கோழையின்மொழி.

ஜோலா, பேனவை எடுத்தார். பிரான்சு முழுவதும், டிரைபசை வெறுக்கிறது. ஆம்! அவனுக்காகப் பரிந்து பேசுபவரையும் பகைக்கும். இலக்கியமன்றம் இடித்துரைக்கும். ஆமாம்! ஆனல்? அநீதிக்குச் சக்தி அதிகம் இருக்கிறது என்பதற்காக அதன் போக்கில் விட்டுவிடுவதா, அதன் அடிபணிவதா, அதற்கா, இந்த அறிவு, ஆற்றல்? விளக்கைத் தூண்டினர்; குறிப்புத்தாட்களையும், ஆதாரக்கடிதங்களையும் ஒன்றுசேர்த்தார்; களத்திலேபுகும் வீரனானர். உண்மைஎழுந்தது! எழுதினர் எழுதினர், இரவெல்லாம்எழுதினர்! எங்கோ தீவில் எவனே ஒருவன் படும் அவதியைத்துடைக்கத் தீட்டினர். இரவு இரண்டு, ஓயவில்லை, மூன்று, முடியவில்லை; நான்கு, பேன வேலைசெய்த வண்ணமிருக்கிறது. ஜோலாவின் மனைவி, விடியற்காலைபார்க்கும்போது அறையில்விளக்குஎரிகிறது, ஜோலா எழுதுகிருர், மேஜை எல்லாம் தாள்கள். ஆவேசம் கொண்டவர் போல் ஜோலா இருந்தார் "நீதி" தயாராகி விட்டது.

* * *

"அரோரி" பத்திரிகைக் கூடத்திலே, நண்பர்களை வரச் சொல்லிவிட்டு, ஜோலா, கிளம்பினர், அவர்களைக்காண.

பாடடைத்தலைபுடன், கசங்கிய உடையில் வேகமாகக் கடைவீதியில் ஜோலாசென்றபொழுது கோச்சுவண்டியில் இருந்தநீதிபதிக்குஜோலாவின் வேகம் கலக்கத்தை உண்டாக்கியது. விலைகூறிக்கொண்டிருந்த கடைக்காரன் ஜோலாவையே பார்த்தான். சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தவர்கள் ஜோலாவைக் கண்டதும் வாயிற்படியில் வந்துநின்றனர். பத்திரிக்கைக்கூடத்தில் நுழையும் பொழுது அவரால் அழைக்கப்பட்ட அனைவரும் காத்திருந்தனர். எரிமலை வெடிக்கப் போகிறதா?

டிரைபசினுடைய மனைவியின் கண்கள் நம்பிக்கையால்ஒளிவிட்டன. வழக்கறிஞ லபோரிக்கு ஒவ்வொரு விநாடியும் யுகம்போலத் தோன்றியது, அனதேல் பிரான்சுக்கு உட்காரமுடியவில்லை. எல்லோருக்கும் வணக்கஞ்செலுத்திவிட்டு ஜோலா தன் கையெழுத்துக் கட்டைப் புரட்டினன்.

"பிரெஞ்சுக் குடியரசின் தலைவரே ...........டிரைபஸ் வழக்கு பிரெஞ்சு நீதியின்மீது அழியாத களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது...........!"

டிரைபசின் மனைவி மகிழ்ச்சியால் முகமலர்ந்தாள்.

ஜோலா கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்தார். அறையில் அமைதி நிலவியது, டிரைபசின் சகோதரனின் கன்னத்தில் கண்ணீர் வழிந்தது.

"அநீதிக்கு வழிவிட்டு நாம் அமைதியாக வாழமுடியாது. டிரைபஸ் மீது பலகுற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. அவன் நன்ருகப் படித்தவன்—குற்றம். சலியாத உழைப்பாளி—குற்றம். உண்மையானசாட்சியங்கள் அவனுக்கெதிராகக் கிடைக்கவில்லை — குற்றம். அவன் ஒரு யூதன்—குற்றம்—அவன் கலங்காதவன் — குற்றம். அவன் கலக்கமடைந்தான்—குற்றம்"

துடிதுடிக்கின்ற விரல்களால் மற்றொரு பக்கத்தைப்புரட்டினர், குரல் இன்னும் கனத்தது.

"யுத்தமந்திரி, இராணுவக் குழுவினர், படைத்தலைமை எஸ்டர்ஹேஸியைச் சந்தேகிக்க மனமொப்பவில்லை. ஓராண்டிற்கு முன்பிருந்தே அவர்களெல்லோருக்கும் நன்ருகத் தெரியும் டிரைபஸ் குற்றமற்றவனென்று. குற்றமற்றவன் தீவில் வாடும்பொழுது, அநீதிவழங்கியவர்கள் அமைதியாக வாழ்கிருர்கள், மனைவி, மக்களிடம் அன்புபாராட்டுபவர்கள், மனிதாபிமானமுள்ளவர்கள்."

நீர்த்துளிபடர்ந்த கண்ணாடியைத் துடைத்துக்கொண்டுஜோலாமேலும் படிக்கலானர்.

"இராணுவக் குழுவினர் எஸ்டர்ஹேஸை விசாரித்தனர். ஏன்? டிரைபஸை மற்றுமொருமுறை தண்டிக்க. இது உண்மை, ஆனல் பயங்கரமான உண்மை. நான் உறுதியுடன் கூறுகிறேன்-உண்மை கிளம்பிவிட்டது, எதுவும் அதைத் தடைசெய்ய முடியாது."

ஜோலா உரத்தகுரலில் கூவினர். பத்திரிக்கைக் கூடவாயிலில் மக்கள் கூட்டம்தேங்கியிருந்தது. கண்ணாடிக் கதவுகளின் வழியாக ஆச்சரியமுற்ற கலங்கிய முகங்கள் துடிதுடிப்புடன் காத்துக் கொண்டிருந்தன.

"புகழ்பெற்ற பிரெஞ்சுத் தாயகத்தின் தனிப்பெருந்தலைவரே! மூன்று ஆண்டுகளாக வழக்கை நடத்திய டார்ட் என்பவர் மீதுநான் குற்றஞ்சாட்டுகிறேன். கிடைத்த உண்மைக் குறிப்புகளை மறைத்ததற்காக யுத்த மந்திரியின்மீது நான் குற்றஞ்சாட்டுகிறேன். அதேபழிச்செயலைச் செய்த இராணுவக்குழுவினரையும், உதவிப்படைத்தலைவரையும் நான் குற்றம் சாட்டுகிறேன்! கைதியினிடத்தில் கொடுமை காட்டிய பாரிஸ் சிறைச்சாலைத் தலைவர்மீது நான்குற்றஞ்சாட்டுகிறேன்! வழக்கில் பொய்ச்

சாட்சிகளும், பொய்க்கையெழுத்தும் தயார்செய்தவர்கள் மீதும் குற்றம் சாட்டுகிறேன்!

பொதுமக்களின் மனதை மாற்றும் வகையில் பொய்ப்பிரசாரம் செய்தயுத்த இலாகா முழுவதையும் நான் குற்றம் சாட்டுகிறேன்! வழக்குக்கு ஆதாரமான சாட்சியங்களை தண்டிக்கப்படுபவனுல் பரிசீலனையும் சமாதானமும் கூறமுடியாத வகையில் அவசரத்துடன் அநீதிவழங்கியமுதல் இராணுவ மன்றத்தை நான் குற்றஞ்சாட்டுகிறேன்! உண்மையான குற்றவாளியை "குற்றமற்றவனென" பெருந்தவறுசெய்த இரண்டாவது இராணுவ விசாரணை மன்றத்தை நான் குற்றஞ் சாட்டுகிறேன்! ஒரு அனுதையின்மீது இல்லாத பழிகளைச்சுமத்தி ஆயுட்கால தண்டனையைக் கொடுத்த அனைவரையும்—அந்தக் குற்றஞ்சாட்டியவர்களை நான்குற்றஞ்சாட்டுகிறேன்! இத்தகைய குற்றச்சாட்டுகளை தெரிவிப்பதன்மூலம் நான் சட்டத்தை அவமதிப்பவனுக அவதிக்குள்ளாக்கப்படுவேன் என்பது தெரியும். அதைப்பற்றிக் கவலையில்லை.நான்நீதிவேண்டுகிறேன். குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்துவிட்டது. விளக்கமான மறுவிசாரணை நடப்பதாக!"

பத்திரிக்கைக் கூடம் பரபரப்புடன் வேலை செய்யத் தொடங்கியது. முதல்பிரதி—இரண்டு மூன்று-வேகமாக-ஆயிரக்கணக்கில் பத்திரிகை குவிந்தது, ஜோலாவின் "குற்றச்சாட்டு" பாரிசைக் கவ்வியது எதிர்பாராதது. ஒருவருக்கும் என்ன சொல்வதென்றே புரியவில்லை. யுத்த மந்திரிசபை கூடியது. ஏதாவது செய்தாகவேண்டும். என்ன செய்வது? படைக்குழுவினர் கூலியாட்களையமர்த்தி, "ஜோலா வீழ்க" எனக் கூவச் செய்தனர். வீதிகளில் மூர்க்கத்தனமான சம்பவங்கள் நடைபெற்றன. "அரோரி" பத்திரிகைக்கூடம் தாக்கப்பட்டது. "குற்றச்சாட்டு" செய்தித்தாள்கள் கிழிக்கப்பட்டன. ஜோலாவின் கண்முன்னுல் அவருடைய வைக்கோலுருவமும் டிரைபசின் வைக்கோலுருவமும் தீயிலிடப்பட்டன. ஜோலா துரத்தப்பட்டார். அவருடைய வண்டிக்குள் கற்கள்விழுந்தன. இரத்தக்காயத்துடன் ஜோலா வீட்டிற்கு சென்றுர். வீட்டில் தயாராகக் காத்துக்கொண்டிருந்த போலீஸ் ஜோலாவைக் கைதியாக்கியது.

* * *

ஜோலாவின் வழக்கு ஆரம்பமாகியது. ஜோலாவிற்காகத் திறம்பட வாதித்தவர் லபோரி. வழக்கு ஆரம்பமாகும் பொழுது, அது தனிப்பட்ட வழக்கென்றும், டிரைபஸ் வழக்கிற்குச் சம்பந்தப்பட்டதல்ல வென்றும் நீதிபதி கண்டிப்பாகக் கூறினுர். அது ஒரு இராணுவத்தினரின் நாடகம் போல முடிந்தது. கடைசியில் ஜோலா கூறியவை மறுக்க முடியாதன, "நான் எழுதுபவன், பேசுந்திறன் படைத்தவனல்ல. எனது வாழ்நாளில் பெரும்பகுதி உண்மையொளிகாண செலவழிக்கப்பட்டது. அதே விருப்பத்தால் தான் இந்த வழக்கில் ஈடுபட்டேன். பலமான இராணுவத்தையும், அதிகாரமுள்ள அரசாங்கத்தையும் எதிர்க்க முடியுமா? என என் நண்பர்கள் என்னைத் தடுத்தனர். தனி மனிதனின் சிதைவில் நீதி சிறக்குமாயின் அதனுல் பலன் பெரிதே .... ....வரலாற்றுல் மறக்க முடியாத பெரும் குற்றத்தை இந்த நீதிமன்றம் செய்துவிட்டது. நீதிக்கு வழிகாட்டிய எனது பெரும் புகழ் தாயகம் அநீதிக்கு எடுத்துக் காட்டாக ஆக்கப் படுவதை நான் ஒப்பவில்லை ....

பிரெஞ்சு நாட்டின் முன்னுல், உலகின் முன்னுல் அழுத்தமாகக் கூறுகிறேன் டிரைபஸ் குற்றமற்றவன்! என்னுடைய நாற்பதாண்டு உழைப்பின் மீது, நாட்டிலே பரவிய புதிய உண்மையுணர்வின் மீதுஆணையிட்டுக்கூறுகிறேன், டிரைபஸ் குற்றமற்றவன்? நான் அழிந்து போவேன், .... என் புகழ் மங்கிப்போகலாம் .... எனினும் டிரைபஸ் குற்றமற்றவன்!"

ஜோலா போராடினுர். விசாரிக்கு முன்பே முடிவு கட்டப்பட்ட வழக்கில் நீதிக்கு இடமெப்படி இருக்க முடியும்? ஓராண்டு சிறைத்தண்டனையும், மூவாயிரம் பிராங்கு அபராதமும் ஜோலாவுக்கு விதிக்கப்பட்டது.

இராணுவத்தினர் குதூகலித்தனர்: வெளியில் கூடியிருந்த கூட்டம் "இராணுவம் வாழ்க! வீழ்க ஜோலா" என முழங்கியது.

"என்புகழ் மங்கிப் போகலாம்!" "ஆனுல் டிரைபஸ் குற்றமற்றவன்!!" ஜோலாவின் முழககம் அது. புகழ்மங்கவில்லை, பெரியதோர் ஒளியைப் பரப்பிக்கொண்டு கிளம்பிற்று, பாரெங்கும். டிரைபசும் விடுதலை பெற்றுன். அதுபிறகு. ஆனுல் முதலில் வெற்றி இராணுவத்தினருக்கு. "வீழ்க ஜோலா" முதலில். பிறகே "வாழ்க ஜோலா." முதலில், ஜோலா, பாரிஸ் பட்டணத்திலே நிலைத்திருக்கவே முடியாத நிலை இருந்தது.

ஜோலாவும் அவனுடைய நண்பன் பால் செஸானே என்பவனும் அந்த ஊருக்கு மிகுந்த நம்பிக்கையுடன் தான் வந்தார்கள். பொழுதுபோவது கூடத் தெரியாமல் இருவரும் சிறிய வாடகைஅறையில் உட்கார்ந்து திட்டமிடுவார்கள். செஸானே தன்னுவியத் திறமையால் உலகையே ஆட்ட முடியும் என்பான்; ஜோலா தன் எழுத்தாண்மையால் வாழ்க்கையை வளம் பெறச் செய்யலாம் எனக் கனவு காண்பான். கையிலிருந்த காசு குறையக் குறைய, அவர்களுடைய உற்சாகமும் குன்றியது, மிகச்சுலபத்தில் கட்டப்பட்ட கற்பனைக் கோட்டைகள் வெகுவிரைவில் தரைமட்டமாயின. மிகுந்தவை. இருட்டறையில் உலவுகிற செசானேயும், வறுமைச் சகதியில் தத்தளித்துக் கொண்டிருந்த ஜோலாவும் தான்.

ஜோலாவுக்குப் பாரிஸ் நகரத்துப் பெயர் பெற்ற புஸ்தகக்கடையொன்றில் வேலை கிடைத்தது. புத்தகங்களை அடுக்கி மூட்டை கட்டும் வேலைதான் செய்தான். அதற்காகக் கிடைத்த சிறுவருவாய் அவர்களது 'எப்பொழுதும் வறுமை' என்ற நிலையை ஒழித்தது. ஜோலாவுக்கு இப்பொழுதுதான் தன்னைச் சுற்றிலும் பார்த்து நுணுக்கங்களை உணரநேரம் கிடைத்தது. உள்ளேவறுமையாலும், துன்பத்தாலும் துடித்துக்கொண்டிருந்த உலகின் ஒவ்வொரு பகுதியையும் நன்கு ஆராய ஆரம்பித்தான். அவன் ஆராய விரும்பிய உண்மைகள் மேல் பூச்சின்றி, மறைக்கப்படாததால் சந்து பொந்துகளில் பொதிந்து கிடந்தன. ஒவ்வொரு உண்மையும் வைரத்தைப் போன்று அவனுக்கு பிரகாசித்தது. சோர்வும் வெறுப்பும் கொள்ளாமல் ஜோலா தான் பார்த்தவைகளைக் குறிப்பெடுத்தான். பெரும் போருக்கு ஆட்கள் திரட்டுவதைப் போல ஜோலா சமூக அநீதிகளைத் திரட்டிக் கொண்டிருந்தான். இரவில் வெகுநேரம் வரை பாரிஸ் நகரத்துச் சேரிகளில் அவன் உலவுவான். வீதியோரத்திலும், சாக்கடைப் பக்கங்களிலும், இடிந்த மனைகளிலும், ஆற்றுப்படிக்கட்டுகளி

லும் பெருவாரியான மக்கள் குளிர் பொறுக்க மாட்டாது அடைந்து கிடப்பதைக் கண்ணுற்றான். இருட்டின் கறைகள், இருண்ட வாழ்வினர், தொங்கும் நரம்பின் குப்பைகள், சமூக பலிபீடத்தில் சாய்ந்த மாந்தர் அனைவரையும் கண்ணுற்றான்.

ஜோலா சிறு சிறு கட்டுரைகள் எழுதி, பத்திரிகைக்காரர்களிடமிருந்து உதவிபெறுவான். புத்தகக் கடைச் சொந்தக்காரருக்கு ஜோலாவின் போக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய "கீழ்த்தரமான" கட்டுரைகளால் கடையின் மதிப்புக் கெட்டுவிடுமென அவர் பயந்தார். அதற்கேற்றாற்போல் கலைச் சீமான்களையும், அரசியல் கனவான்களையும் கடுமையாகக் கண்டித்து ஜோலா எழுதிய புத்தகம் போலிசாரின் கவனத்துக்கு வந்தது. ஜோலாவும் வேலையை விட்டு நீக்கப்பட்டான்.

1866-ம் ஆண்டு முதல், அதாவது அவனுடைய 26ம் வயதிலிருந்து ஜோலா தன் பேனாவை நம்பியே வாழவேண்டிவந்தது. ஜோலா மனங் குலையவில்லை. உறுதியுடன் தன் போராட்டத்தைத் துவக்கினான். ஒவ்வொரு மணி நேரத்திற்கும் அட்டவணை போட்டுக்கொண்டு சலியாது அவன் உழைத்தான். நூல்களைப் பதிப்பிக்க அவனுடையநண்பரொருவர் முன்வந்தார். ஜோலாவின் கதைகள், கட்டுரைகள் ஒவ்வொன்றாக வெளிவர ஆரம்பித்தன. அவைகள் சமூகத்தின் அநீதியையும் அரசியல் அக்ரமத்தையும் வன்மையாகக் கண்டித்தன. முதலில் அவனுடைய புத்தகங்கள் விலைபோகவில்லை. ஏனெனில் தங்களைப் பற்றிய முழு உண்மையை உணர மக்கள் மனங் கூசினர், புத்தகக் கடைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை.

சாதாரண ஜோலா இலக்கிய உலகில் புகுந்துவிட்டார். புத்தகங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பின. மலையுச்சியிலிருந்து விரைந்து வரும் பேராறுகளைப்போல, கட்டுரைகள் ஜோலாவின் பேனா முனையிலிருந்து கிளம்பின. அவருடைய நாவல்களனைத்தும் அடிப்படையான கருத்துக்களின்மீது கட்டப்பட்டவை. கற்பனையில், கனி தருகிற கற்பகத் தருவைவிட, குப்பைமேட்டில் சேர்ந்திருக்கிற முட்செடி ஜோலாவுக்கு மேலானதாயிருந்தது. தான் கண்ட உண்மைகளை எழுச்சிதரும் வகையில் அவர் உலகுக்கு எடுத்துக் காட்டினார். சமூக அமைப்பில் கண்ட ஏற்றத் தாழ்வுகளைச் சுட்டிக் காட்டினார். கொடுங்கோலர்களை எதிர்த்தார், குருமார்களைச் சாடினார். அவருடைய நாவல்களில் நிலையற்றோர், வஞ்சகர், அனாதைகள், ஆணவக்காரர், திருடர், சோம்பேரிகள், குடிகாரர், கனவுகாண்போர், நலிந்த உழவர், ஒடுக்கப்பட்ட உழைப்பாளர், கொடியமுதலாளிகள், பேராசை பாதிரிமார், முதுகெலும்பற்ற கலைவாணர், வெறிகொண்ட மதப் பித்தர், அனைவரும் சித்தரிக்கப்பட்டனர்.

சாதாரண குடும்பத்தினரின் வரலாற்றை விளக்கமாக, தொடர்ந்து எழுதுவதென ஜோலா 1871ல் தொடங்கிச் சுமார் 30 ஆண்டுகளில் 20 நாவல்கள் வெளியிட்டார். ஒவ்வொரு நாவலும் வாழ்க்கைப் பகுதியை தனித் தனியாக விளக்குவது. மார்க்கட்டைப் பற்றிய நாவலில் பணத்திற்காகச்செய்யப்படும்மோசடிகள் கூறப்பட்டுள்ளன, அடுத்தநாவல் குடியைப் பற்றியது. அது 1877ல் வெளிவந்தது. ஜோலா எழுதிய நாவல்களில் முதலில் மக்களை அவர் பக்கம் இழுத்தது அந்த நாவல்தான்.

1880ல் "நானா" வெளிவந்தது. "லா பெட்டே ஹா¬மன்னே" என்பது புகைவண்டிகளைப் பற்றியது. "ஜெர்மினல்" சுரங்கங்களின் இருண்ட வாழ்வை படம் பிடிப்பது. பெரும் முதலாளிகளின் சுரண்டல்போக்கை வெட்டவெளிச்சமாக்கியது. "வார் ஜெந்த்" உலக வரலாற்றில் எழுந்த முதல் தொழிலாள அரசாங்கம் உள்நாட்டு முதலாளிகளாலும், பிரஷிய பிரபுக்களாலும் நெரிக்கப்பட்டுத், தொழிலாளரின் இரத்தமும்; ஏழையின் கண்ணீரும் சிந்தப்பட்ட 1870ம் ஆண்டைப் பற்றிய "வீழ்ச்சி" ஜோலாவின் நாவல்களில் உயர்ந்த வகையில் ஒன்றாகும். "லுவார்ட்ஸ்" என்ற நாவல் மதத்தின் மூட நம்பிக்கைகளைச் சிதறடித்தது.

* * *

போராடிப் பெற்ற நிலையை, ஒரு துர்ப்பாக்கியனுக்கு நீதி தேடித்தரத் துணிந்ததால் இழந்த ஜோலா சிறை புகவேண்டுமென்று "தீர்ப்பு" கிடைத்தது.

ஜோலாவின் இடையாறுதஉழைப்பிற்கு அவரடைந்த பலன்.

நாட்டைவிட்டு ஓடிப்போகும்படி நண்பர்கள்கூறினர். "அதுகோழைத்தனம்" என ஜோலா உதறித்தள்ளினார். பக்கத்திலிருந்த நண்பர் அவரைத்தட்டி, 'ஜோலா, பாரிஸ் சிறையில் வாடுவதில் பலனில்லை. வெளிநாட்டுக்குச்செல். அங்கிருந்து டிரைபஸ் வழக்குப்பற்றி கட்டுரைகள் அனுப்பு, ஓடிப்போவதால் நீகோழையாகமாட்டாய். தாய்நாட்டைவிட்டு மனைவி, நண்பர்களைவிட்டு ஓடுகிறாய் உன்கருத்தை — லட்சியத்தை புறக்கணித்தல்ல. சிலசமயங்களில் கோழைப் பட்டத்தை ஏற்றுக் கொள்ளப் பெருவீரம் வேண்டும்" என்றார். ஜோலா அதை ஏற்றுக் கொண்டார். 1897ம் ஆண்டு, அவரது 57ம் வயதில் ஜோலா இங்கிலாந்துக்கு ஓடினார்.

ஜோலாவின் வெடிகுண்டுகள் தூரத்திலிருந்து வீசப்பட்டன. "அரோரி" பத்திரிகை இடைவிடாதுஉழைத்தது; உண்மைகிளம்பிவிட்டது, அதைத்தடுக்க எவராலும் முடியாது.

ஐரோப்பியநாடு அரசியலேஇரண்டாகப்பிரிந்தது. ஒருபக்கத்தில்வெறிபிடித்த இராணுவம், பிரபு, அரசவம்சம், மதத்திற்கும், கலைக்கும் (பாது) காப்பளிக்கிற குருமார் கூட்டம். மறுபக்கத்தில் மெதுவாகத்தலை தூக்குகிற புத்துணர்ச்சி.

பிரெஞ்சு மந்திரிசபை மாறியது. உண்மைத்துரோகி எஸ்டர் ஹேஸி கூண்டில் நிறுத்தப்பட்டான். அவனுக்கு உதவியாக இருந்த ஹென்றி தற்கொலை செய்து கொண்டான். எஸ்தர் ஹேஸிநாட்டை விட்டோடினான். முன்வழக்கை ஜோடித்த இராணுவ வழக்கறிஞன் டார்ட் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். டிரைபஸ் வழக்குமீண்டும் விசாரணைக்கு வந்தது.

1899-ல் பிரான்சு நாட்டுக்கு ஜோலா, திரும்பினான். மூன்றாண்டுகளுக்கப்புறம் துடிதுடிப்பான இருதயம் ஓய்ந்தது. 1902 செப்டம்பர் 76-ல் ஜோலா இறந்தார். அவரு

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.